பேருமுண்டோசொல்லென்னுசாபப் பெருநெருப்புக்
ஈரமுண்டோவையமேல் பெண்பாவமினிச்சொல்வதே. ௫௫

உருகியுடல்கருகி யுள்ளீரல்பற்றி
எரிவதவியாதென்செய்வேன்-வரியரவ
நஞ்சிலேதோய்த்தகளிவிழிப்பெண்பெருமாள்
நெஞ்சிலேயிட்டநெருப்பு. ௫௬

வாணன்புகழ்க்கெல்லை வாழ்த்துவார்நாவெல்லை
வாணன்புகழ்க்கெல்லை மண்ணெல்லை-வாணன்
படைக்கெல்லைதிக்கெல்லை பைந்தமிழ்தேர்வாணன்
கொடைக்கெல்லைமேற்றவங் கோள். ௫௭

நில்லாதபசலுமூப்பறிபட்டகூந்தலு நீண்டசரிப்
பொல்லாமுழுங்குப்புண்ணுவயமாய்வெகு பூச்சியும்போய்ச்
செல்லாப்பணத்துக்குத்தேடுபற்றுத்தியங்கேயென்றுமா
இல்லாதபாவிதனைக்கர் தலைபொன்னீரட்டனமே. ௫௮

வாசமலர்ப்பங்கயத்த போல்வாயபாதந்தனைத்
தேசணியமரருந்தின்பர்-நேசத்

இரவலர்மேனீட்டுவர்கை யீண்டுலகையாளும்
புரவலர்னீட்டுவர்பொற் றாள். ௫௬

ஆற்றங்கரையி னருகிருக்குமாமரத்திற்
காக்கையிருந்து கஃ குஃகெனக்-காககைதனை
எய்யக்கோலில்லாமல் இச்சிச்செனவெய்தான்
வையக்கோனாரி மகன். ௬௰

ஏகம்பவாணன் மனைவி.

சேனைதனையூடாக்கிச் செங்குருதிநீர்தேக்கி
ஆனைமிதித்த வருஞ்சேற்றில்-மானபரன்
பாவேந்தர்வேந்தன் பறித்துநட்டானேகம்பன்
மூவேந்தர்தங்கள் முடி. ௬௧

கம்பர்வீட்டுவெள்ளாட்டி

நெற்படிவிளைகழனி புடைசூழ்தென்மலிவாள்தச்சன்
கற்படிபனைதோளான் பெயரோகஞ்சனகனகனவன்
விற்பாடிவாணுதலாண்மனைவி மிண்மிணிமிணிமிணிமி
சொற்படிவேலைசெயுமவளோதுந் துமிதுரிதுரிதி. ௬௨

வட்டமதிபோலிருக்கும் வன்னிக்கொடிதாவுங்
கெட்டுவார்கையினிற் கூத்தாடும்-சுட்டால்
அரகராவெனனுமே யம்பலசேமாகி
ஒருநாள்விட்டேனீ துணை. ௬௩

தென்னவாமீனவா சீவிலிமாறுமதுரை
மன்னவாபாண்டி வரராமா-துன்னுங்
கரும்புக்குத்தாரளித்த துய்யதமிழ்நாடா
கரும்புக்குவேம்பிலே கண். ௬௪

மாப்பந்தாள்க்கல்லமுத்து வண்ணத்தார்க்கல்லவஞ்சி
வேப்பந்தார்க்காசைகொண்டு விட்டாளே-பூப்பைந்தார்
சேர்ந்திருக்குநெல்வேலிச் சீவிலிமாறுதமிழை
ஆய்ந்திருக்கும்வீரமா று. ௬௫

வேம்பாகினுமினிய சொல்லுக்குநீபுனைந்த
வேம்பாகிலுமதவேண்டாமோ-மீனபாயும்
வேலையிலேவேலைவைத்த மீந்தவாநின்புயத்து
மாலையிலேமாலைவைத்தான் மான். ௬௬

இலகுபுகழாறை யேகப்பவாணன்
அலகைவரும்வருமென் றஞ்சி-உலகறிய
வாணவர்கோன்சென்னிமிசை வண்கைவளையெறிந்த
மீனவர்கோன்கைவிடான் வேம்பு. ௬௭

பாண்டியன்மனைவி.

வேண்டிப்போதின்பம் விருப்புமடைந்தையரைத்
தீண்டியகையாலென்னைத் தீண்டாதே-பாண்டியா
முலைக்கிபா முகம்பார்த்தகலநின்று
சொல்லக்கடவதெல்லாஞ் சொல். ௬௮

கலையான்புலைமுடிக் கண்ணவளைக்குள்ளாக்கும்
விலைமாதர்தாம்வர விட்டாரோ-விலைமாதர்
கொங்கையிலேதோய்ந்த குறைதீரத்துய்யசிவ
கங்கையிலே நீராடிவா. ௬௯

ஆக செய்யுள்-௬௯.

இலக்கணக்கவிகளாகிய

ஒட்டக்கூத்தரும் புகழேந்திப்புலவரும்

அவ்வவ்வமயங்களிற்கூறிய தனிப்பாடற்றிரட்டு.

கலைவாணிநீயுலகிலிருப்பதுவுங் கல்விவல்லோரைத்
தலையாகக்காப்பதுவுமவர்நாவில் வாழ்வதுவுஞ்சத்தியமேயன்றோ
சிலைவாணநாவிருந்தாயிரம்புயங்க டுணிந்துமுயர்சிவனூற்றான்
தலைபாவிகொடுத்திடுஞ்செங்குந்தருயிர்பெற்றிடநீதயைசெய்வாயே.
நிலைதந்தாருலகினுக்குமியாவருக்கு மானமதுநிலைக்கத்தந்தார்
கலைதந்தார்வணிகருக்குச்சீவனஞ்செய்திட வென்றேகையிற்றந்தார்
விலைதந்தார்தமிழினுக்குச்செங்குந்தரெனக்கவிக்கேவிலையாகத்தான்
தலைதந்தாரெனக்குமொட்டகூத்தனெனப்பெயரிணையுந்தான்தந்தாரே

பத்துக்கொண்டணிக்கும் பதறிப்போயலையப்
பைபெற்றாரகைசிந்தப் பகிரண்டத்திடைநீள்
மத்துக்கொண்டடிக்குந்திவா யாருநெடும
ல்லிவாகிப்புவிகைக்கொண்டருண்மானுபாறு
முத்துப்பந்தரினிற்குங் குருளைக்குஞ்சினவேள்
முருகற்கும்பொதியைக்கோ முனிவர்க்குஞ்சடிலக்

கொத்தர்க்கும்பதுமக் கொத்தயனுக்குமலதிக்
கூழைத்தண்டமிழுக்கேன் கொடியுங்காளமுமே. ௩

இன்றல்லோகம்பனிறந்தநாளென்கவிதை
இன்றல்லோராசசபைக் கேற்குநாள்-இன்றல்லோ
பூமடந்தைவாழப் புவிமடந்தைவீற்றிருக்க
நாமடந்தைநூல்வாங்குநாள். ௪

இன்றல்லோகம்பனெழுந்தநாளென்கவிதை
இன்றல்லோராசசபைக் கேறுநாள்-இன்றல்லோ
பூமடந்தைவாழப் புவிமடந்தைவீற்றிருக்க
நாமடந்தைநூல்பூட்டு நாள் ௫

கட்டளைக்கலித்துறை.

மாக்குயிலாள்வில்லிதன்னைப்பிறைக்கம்பவாரிதியால்
ஓங்கியபூவெல்லைபொன்றினுலும்பாமதியாற்
றீங்குழவோநல்லெழில் குன்றுமோகொம்புசீர்கெடுமோ
காங்கேயனேசொல்லகளங்கனே சம்பைக்காவலனே. ௬

காண்டகண்டத்தெரிக் கஞ்சியமானகருகசங்குலிலே
திரண்டவெள்ளத்திற்பிணமீதுசென்றனள்சேர்ந்தவனே
ஆரண்டவிடங்கொடுமீளக்கரைமடபற்றலங்கொலுவால்
குரண்டசன்னத்திலுதைத்தனள்காணங்குலோத்துங்கனே. ௭

சோரத்துக்குப்பொப்போசனவட்டமம்மானை
கூறுவதுங்காவிரிக்குவைகையோவம்மானை
ஆருக்குவேம்புநிகராகுமோவம்மானை
ஆதித்தனுக்குள்விரலொருமீனவனேவம்மானை
வீரர்க்குள்வீரனொருமீனவனேவம்மானை
வெற்றிப்புலிக்கொடிக்கு மீன்கொடிபோவம்மானை
ஊருக்குறைந்தநிகர் கொற்கையோவம்மானை
ஒக்குமே சோணாட்டுக்குப் பாண்டியநாடம்மானை.

புகழேந்தி.

திருநெடுமாலவதாரஞ் சிறுபுலிபோவம்மானை
சிவன்முடியிலேறுவதுஞ் செங்கதிரோவம்மானை
ஒருமுனிவனேரியிலோ வுலகுதெளிந்ததம்மானை.
ஒப்பரியதிருவிளையாட் டுறந்தையிலோவம்மானை
கரைபெதிரேறியது காவிரியோவம்மானை
கடிப்பகைக்குத்தாதகியங் கண்ணியோவம்மானை

பாவைபடிந்தாஞ்சோழன் பதந்தனிலே வம்மானை
பாண்டியனார் பராக்கிரமம் பகரெளிதோ வம்மானை. ௯

ஒட்டக்கூத்தனும் சோழராசனும் பாடியது.

ஆடுங்கடைமணி நாவசையாம லகிலமெங்கும்
நீடுங்குடையைத் தரித்தபிரானிந்த நீணிலத்தில்
பாடும்புலவர் புகழொட்டக்கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங்குலோத்துங்க சோழனென்றேயெனைச் சொல்லுவரே. ௰

ஒட்டக்கூத்தன்.

இன்னங்கலிங்கத்தில் வேந்தருண்டென்றோ
தென்னவறநிழுந்தட்டைச் சிறியா-சென்னி
அகளங்காவுங்க ளயிராவதத்தின்
நிகளங்கால்விட்ட நினைவு. ௧௧

புகழேந்தி.

தென்னவன்றென்னர் பெருமான் பிறன்மதுரை
மன்னவன்கோக்களிற்றின் வல்லிக்கும்-பொன்னிநா
டாலிக்கும்வேந்த ரப்புபாகுலன்மகளிர்
தாலிக்குமொன்றே தளை. ௧௨

புகழேந்தி.

சத்தம்பயிலும்புலவோர்கதலித் தண்டோட்டம்பகும்
பித்தனிவனென்பரென்னைக்கண்டார் பெருத்துப்பணைத்துத்
தந்தம்பிறங்கிம்பர் வேந்தர் தங்கடகுப்
சத்தப்பசத்தங்கான் கங்குல்யானைச்சபதுங்கனே. ௧௩

ஒட்டக்கூத்தன்.

நாணிற்குமோவிந்த வாளரிவெங்கைமுன் வற்றிச்செத்த
காணிற்குமோவிவ்வெரியுந்தனைன் முன்கனைகடலின்
மீனிற்குமோவிந்த வெங்கண் சுறாமுனம் வீசுபனி
தானிற்குமோவிக்கதிரவன் றோற்றந்திற்றூர்மன்னனே. ௧௪

புகழேந்தி.

வானவனானந்தலாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானவனைவ்வெரியுந்தனன் முன்கனைகடலின்
மீனவனந்தவெங்கண் சுறாமுனம் வீசுபனி
தானவனக்கதிரவன் றோற்றந்தற்றூர்மன்னனே. ௧௫

ஒட்டக்கூத்தன்.

நானேயினியுனை வேண்டுவதில்லை நளினமலர்த்
தேனேகபாடந் திறந்திடுவாய் திறவாவிடிலோ
வானேறனைய விரவிகுலாதிபன் வாயில்வந்தாற்
றானே திறக்குநின் கையிதழாகிய தாமரையே. ௧௬

புகழேந்தி.

இழையொன்றிரண்டுவகிர்செய்த நுண்ணிடையேந்துவளைக்
குழையொன்றிரண்டுவிழியணங்கே கொண்டகோபந்தணி
மழையொன்றிரண்டுகை மானாபரணனின் வாயில்வந்தார்
பிழையொன்றிரண்டு பொறாரோகுடியிற் பிறந்தவரே. ௧௭

ஒட்டக்கூத்தன்.

வெள்ளத்தடங்காச்சினவாளை வேலிக்கமுகின்மீதேறித்
துள்ளிமுகிலைக்கிழித்துமழைத் துளியோடிறங்குஞ்சோணாடர்
கள்ளக்குறும்பர்குலமறுத்த கண்டாவண்டர்கோபாலா
பிள்ளைமதிகண்டெம்பேதை பெரியமதியுமிழந்தாளே. ௧௮

ஔவையார்.

ஒட்டா வொருமதிகெட்டாய்.

புகழேந்தி.

பங்கப்பழனத்துழுமுழவர் பலவின்கனியைப் பறித்ததென்று
சங்கிட்டெறியக்குரங்கிளநீர் தனைக்கொண்டெறியுந் தமிழ்நாடா
கொங்கைச்சமராபதியளித்த கோவேராஜகுலதிலகா
வெங்கட்டிறைக்குங்கரும்பிறைக்கு மெலிக்கும்பிறைக்கும்விழிவேலே

ஒட்டக்கூத்தன்

புள்ளிருக்குங்கார்மார்பன் பூம்புகார்வாழ்களியேம்
சுள்ளிருக்குங்கள்ளையுண்டுஞ் சோர்விலோ உள்ளபடி
சொல்லவாவாலி துரோபதையைமுக்கரிந்த
தல்லவாமாபாரதம்? வாலி-அரவக்கொடியையுடைய துரியோதனன்.

என்றுபெருவேன்யா னீசன்றிருமுடிமேல்
சென்றுவிளையாடுகின்ற தீபமே-என்றும்
செருப்புக்குத்தோல்வாங்குஞ் சென்னியாளங்கள்
பொருப்புக்குத்தோலாப் புயம். தோல்-யானை. ௨௧

வேளாளன்.

கோக்கண்டுமன்னர் குரைகடற்புக்கிலர்கோகனகப்
பூக்கண்டுகொட்டியும் பூவாதொழிந்திலபூமுழுதுங்

காக்கின்றமன்னன் கவியொட்டக்கூத்தனின் கட்டுரையாம்
பாக்கொண்டொளிப்பார்களோ தமிழ்ப்பாண்டியபாவலரே. உஉ

கருமான்.

செல்வன்புதல்வன் திருவேங்கடவன் செகத்குருவான்
கொல்லன்கவியைக்குறைசொல்லுவோரைக் குறடுகொண்டு
பல்லைப்பிடுங்கிப்பருந்தாட்டமாட்டிப் பகைவர்முன்னே
அல்லும்பகலும்மடிப்பேன் கவிருப்பாணிகொண்டே. (உங)

அம்பட்டன்.

விண்பட்டகொக்கென வெல்லும்வல்லூரின் விலவிலத்து
புண்பட்டநெஞ்சொடு மிந்துநின்றுப்பொட்டை யாய்ப்புகலாய்
கண்பொட்டையாயினு மம்பட்டனுன்கவி வாணர்முன்னே
பண்பட்டசெந்தமிழ்நீயுந் திடுக்கிடப்பாடுவனே. (உச)

குயவன்.

மோனைமுத்தமிழ் மும்மதமும்பொழி
யானைமுன்வந் தெதிர்த்தவனாடா
கூனையுங்குடமுங் குண்டிசட்டியும்
பானையும்வனையுங் குசப்பையல்யான். (உரு)

தச்சன்.

சொன்னசந்தக்கவியாவருஞ் சொல்லுவர்சொற்சுவைசேர்
இன்னசந்தக்கவியேதென்ற போதிலெகிறக்கவரை
வன்னசந்தங்கெடவாயைக் கிழித்திந்தவாச்சியினாற்
கன்னசந்தங்களினிக் கவியாப்பைக்கடாவுவனே. (உசா)

தட்டான்.

திகிரிவட்டக்குடைச்செங்கோலபான்செழுஞ்சிலம்பிற்
பகுதியொட்டக்கூத்தப்பண்டனைநா ணப்பணைக்கவியின்
மிகுதவெட்டத்தட்டிவிட்ட கையோட்டி லுருக்கிக்குத்திப்
புதுக்கொட்டத்தட்டிமே லுநாவண்ணம்பாசெய்வனே. (உஎ)

ஒட்டக்கூத்தனும்-புகழேந்தியும்.

வென்றிவளவன் விறல்வேந்தர்தம்பிரான்
என்றமுதுதுக்கிடான் கவசம்—நன்றும்.
வெறியார்தொடைகமழு மீனவர்கோன்கைவேல்
எறிபான்புறங்கொடுத்த தென்று. (உஅ)

பழிபுகழு மெவர்க்குமுண்டாமிந்தப் பாரிலுனைக்
கழியுஞ்சிலையுங் கயலுமென்று-லகளங்கதுகா

அ

பொழியும்பொழுதெங்கள் பெண்சக்ரவர்த்திமுகத்திரண்டு
விழியுமபுருவமுமாகியசந்தோ வுனைவெல்கின்றமதே. (உக)

திக்குளெட்டுக்கயந்துக்க முற்றுத்திடுக்கிட்டலற
மைக்கடற்குட்சாந்தைக்க விட்டோரகிடமாமதுர
இக்குமுற்றிக்கணுச்சற்று விட்டுகதெறித்திட்டமுத்தைக்
கொக்குமொக்கிவிக்கிக்கக்குமச் சோலைக்குறுங்குடியே. (௩௰)

ஆக—செய்யுள்-௩௪௫.

கவிவீரராகவ முதலியார்.

தேன்பொழிந்தவீரயான றிருவேங்கடத்துடனே
ஏன்பிறந்தான் கண்ணனுக கினியனே-வான்சிறந்த
சீகவியாருடனே செய்யதிருப்பாற்கடலில்
மூதேவியேன்பிறந்தாள் முன். (க)

இம்பர்வானெல்லை யிராமனையேபாடி
யேன்கொணர்ந்தாய்பாணநீ யென்றாள்பாணி
வம்பாகக்களபமென்றேன் பூசுமென்றாள்
மாதங்கமென்றேன்யாம வாழ்ந்தோமென்றாள்
பம்புசீர்வேழமென்றேன் றின்னுமென்றாள்
பகடென்றேனுழுமென்றாள் பழனந்தனைக்
கம்பமாவென்றேனற் களியாமென்றாள்
கைம்மாவென்றேன்சும்மா கலங்கினாளே. (உ)

இல்லெனுஞ்சொல்லறியாத சீகையில்வாழ்தாணனைப்போல யாழ்ப்பாணன்பான, பல்லைவிரித்திருந்தக்கால் வெண்சோறும் பழந்தூசுமபெலியாமற், கொல்லலதினைந்தேதனது நால்வாறைப்பறிசென்றுகொடுத்தாண்பார்க்குள், தொல்லையெனதொருவாய்க்கு நால்வாய்க்குமிரை யெங்கே தேடுப்பேனே. (௩)

முன்னாளிருவர்க்கும் யாக்கையொன்றாக முயங்கினமால்
பின்னாட்பிரியன்விரிசைபென்று வினம்பேசலுறும்
இந்நாட்கொழுநன் மனையென்றாயின மின்னைமுமோர்
சின்னாளிலெப்படியோ வையநீயினறு செப்புகமே. (௪)

வாழுமிலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழுமராமரமோ வில்கில்லை-ஆழி

அலைபடைத்தசெங்கை யபிராமாவின்று
சிலையெடுத்தவாறெமக்குச் செப்பு. (ரு)

செஞ்சுடரின் மைந்தனையுந் தென்னிலங்கைவேந்தனையும்
பஞ்சவரிற்பார்த்தனையும் பாராதே-விஞ்சு
விரதமேபூண்டிருந்த மேதினியையாண்ட
பரதனையுமராமனையும் பார். ௬

வடவைக்கனலைப்பிழிந்துகொண்டு மற்றுமொருகால்வடித்தெடுத்து
வாடைத்துருத்திவைத்தூதி மருக்காய்ச்சிக்குழம்புசெய்து
புடவிக்கயாவர்தமைப்பாடிப் பரிசுபெறுமற்றிரும்பிவரும்
புலவர்மனம்போலெரு வைப் புழுகென்றுரைத்தாற்பொறுப்பாரே.

அடவிக்கதலிபசுங்குறுத்தை யச்சுக்குழலென்றஞ்சியஞ்சி
அஞ்சொற்கிளிகள்பஞ்சரம்விட் டகலாநிற்குமகளங்கா
திடமுக்கட்டவாரணமுகைத்த தேவேதேவசிங்கவே
திக்குவிசயஞ்செலுத்திவரு செங்கோனடாத்துமெங்கோனே.

மாதணிமென்முலைமேல் மாராசிதம்பரபூ
மாசரணிராசாமகிழ்பாலையை மாதர்
மறுகிடத்தேயம்பொன் படவார்பழிக்கநெஞ்ச
மறுகிடச்செந்துரைப்பெண் வா. ௮

சொல்லுமல்லும்பகலுஞ் சோறுகிடைகிடைக்கும்
கல்லுமுருகக் கனிந்தற்றம்-புல்லியனை
விண்கலக்குங்கீர்த்தி வெள்சிதம்பரக்குமுன்
பெண்கலக்கங்கொண்டு நின்றனபேர். ௯

வந்தனந்தமென்பூமண நோயந்துபாயப்பா
வந்தனம்விம்மிச்சோர்ந்தாள் வாகோடி-வந்தனங்கள்
அன்னமனங்கொள்ளாம லாவசிதம்பரக்குமுன்
அன்னமனங்கொண்டுமேவியாங்கு. ௰

மாவாரிமுத்தவெண்பன் மாதுபலைபத்தனிசேர்
பாவாரிமுத்தளிக்கவைபோகா-மாவுச்
சிதம்பரவையா நீதிக்குளுபர்பூமா
சிதம்பரவையா நீதிக்கு. ௰௧

பங்கஜமென்பேசியசெள பாக்கியசுபமானளித்த
அங்கஜமேல்வெங்கணையா லாவிசோர்ந்து-எங்களிட
மாமராஞ்சிதம்பரவுமாதினை நாள்கேடிருக்கும்ஸ்
காரஞ்சிதம்பரா போதா. ௰௨

இன்னங்கலைமகள்பீ திற்புத்தகமேந்தியந்தப்
பொன்னம்பலத்தனிற் புக்கிருந்தாளென்புண்ணியமோ
கன்னல்களத்தைக்கவிவீரராகவன் கச்சியிலே
தன்னெஞ்சமேடெனக் கற்றுணோமுத்தமிழையுமே. ௰௩

முன்னாட்டுத்தவமுனியுஞ் சேடனும்வான்மீகனும் முன்னிமல்லாமற்
றென்னாட்டுமலையிடத்தும் பாரிடத்தும்புற்றிடத்து சென்றுசேர்ந்தார்
இந்நாட்டுப்புலவருனக் கெதிரிலையேகவிவீரராகவநீ
பொன்னாட்டுப்புலவருடன் வாதுசெய்யப்போயினையே புகலுவாயே()

கோளரவேந்துலகிலிந்தப் புதுமையுண்டோ வெனமொழிந்தகுமுனா
கே, யாளரைவந்தணைத்தோய்ந்த கற்புடையபாஞ்சாலிபணிந்தவீயன்
வாளரிபோலருகிருக்க மலையவெற்பிலிருந்துவந்த மாமுனைச்
சாளரவாசலைத்திறந்து வரவழைத்துமுலைபாரத் தழுவினனோ. (௰௫)

பணியாரந்தோசை யிலக்கொங்கைதோய்ந்திடப் பார்ப்பர்பல்லி
பணியாரந்தோசை யிலாச்செந்தளாய்பிறப் பார்களென்றே
பணியாரந்தோசைமுனை னுக்கிட்டேத்திப் பழனிச்செவ்வேள்
பணியாரந்தோசை வராகாரமானோர்க் கென்னபாவமிதே. (௰௬)

வீரஞ்சொரிகின்ற பிள்ளையுனக்குப்பெண் வேண்டுமென்றால்
ஆருங்கொடாருங்களப் பனைகபாலி யம்மான்றிருடன்
ஊருஞ்செங்காடு நின்றன்முகம்யானை யுனக்கிளையோன்
பேருங்கடம்பனுன்றாய் நீலிநிற்கும் பெருவயிறே. (௰௭)

கட்டுச்சோற்றைப் பறிகொடுத்தபோது பாடியது.

சீராடையற்ற வைரவன்வாகனஞ் சேரநந்து
பாராருநான்முகன் வாகனந்தனை முனைபற்றிக்கௌவி
நாராயணனுயர் வாகனமாயிற்று நம்மைமுகம
பாராமைவாகனன் வந்தேவயிற்றினிற் பற்றினனே. (௰௮)

மைவாகனன் - அக்கினிதேவன்.

பாண்டியன்பாலைக்கண்டாய் மகளேநினைப்பார்த்தவர்க்கு
வேண்டியவின்பமீவாரோ வெண்ணெண்ணேயேதிருடித்
தாண்டிக்குதித்தகற்கோதண்டமா ன் றட்டளைமேல்
ஆண்டியிருப்பிடந் தாதனிநப்பிடமாண்பினனே. (௰௯)

சோலைபுங்காத்து நல்லானையுங்காத்துத் துரோபதைதன்
தானையுங்காத்தடைக்க தானையுங்காத்துக் கடத்தசலி
மானையுங்காத்தனு மானையுங்காத்து மடுவில்விழும்
ஆனையுங்காத்தவனே யெனைக்காப்ப தரிதல்லவே. (௨௰)

பொய்யருக்குப்பொய்யுரைத்தால் வெற்றியாமவருக்குப்பொய்யாகாது, மெய்யருக்குப்பொய்யுரைத்தாற் றேய்பிறைபோற்றவங்குறையுமிடியுண்டாகும், தூய்யதாய்தந்தையர்க்குப் பொய்யுரைத்தால்வறுமைபிணிதொலையாதென்றும், உய்யவருதேசிகர்க்குப் பொய்யுரைத்தாரகமதுவுண்மைதானே. ௨௧

ஆக செய்யுள் ௫௱௪௪.

படிக்காசுத்தம்பிரான்.

அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக்கல்வி
யதிகமென்றேகற்றுவிட்டோ மறிவில்லாமல்
திடமுளமோகமுமாடக் கழைகூத்தாடச்
செப்பிடுவித்தைகளாடத் தெரிந்தோமில்லைத்
தடமுலைவேசையராகப் பிறந்தோமில்லைச்
சனியானதமிழைவிட்டுத் தையலார்தம்
இடமிருந்துகுற்றேவல் செய்தோமில்லை
என்னசென்மமெடுத்துலகி லிரக்கின்றோமே. ௧

பெற்றுளொருபிள்ளையென்மனையாட்டி யப்பிள்ளைக்குப்பால்
பற்றுதுகஞ்சிகுடிக்கத்தரமல்ல பாலிரக்கக்
சிற்றுணுமில்லையிவ்வல்லல்வருத்தமுந் தீரவொரு
கற்றுதரவல்லையாவலைமாநகர் காளத்தியே. ௨

வழிமேல்விழிவைத்து வாடாமலென்மனையாளுமற்றோர்
பழியாமற்பிள்ளையும் பாலென்றழாமற் பசியெனுஞ்சொல்
மொழியாமலென்னை வாவிட்டபாவி முசித்துச்சதை
சழியாமலாவளித்தாய்வல்ல மாநகர்காளத்தியே. ௩

சீதக்காதிபேரில்.

ஓர்தட்டிலேபொன்னு மோர்தட்டிலேநெல்லு மொக்கவிற்கும்
கார்தட்டிபஞ்சகாலத்திலே தங்கள்காரியப்பேர்
ஆர்தட்டினுந்தட்டுவாராமலே யன்னதானத்துக்கு
மார்தட்டியதுரைமால் சீதக்காதிவரோதயனே ௪

நேசித்துவந்த கவிராசர்தங்கட்கு நித்தநித்தம்
பூசிக்குநின்கைப் பொருளொன்றுமேமறப் புல்லர்பொருள்
வேசிக்குஞ்சந்து நடப்பார்க்கும்வேசிக்கும் போலைசெயுந்
தாசிக்குமாகுங்கண்டாய் சீதக்காதிதயாநிதியே. ௫

ஈயாதபுல்லரிருந்தென்ன போயென்னவெட்டிமரங்
காயாதிருந்தென்னகாய்த்துபலனென்ன கைபரப்பிப்
போயாகமென்றுரைப்போர்க்குச் செம்பொனபிடிபிடியா
ஓயாமலீபவன்வேள்சீதக்காதி யொருவனுமே. ௬

காய்ந்துசிவந்ததுசூரியகாந்தி கலவியிலே
தோய்ந்துசிவந்ததுமின்னார்நெடுங்கண்க டோல்பலநால்
ஆய்ந்துசிவந்தது பாவாணர்நெஞ்ச மனுதினமும்
ஈந்துசிவந்ததுமால்சீதக்காதி யிருகரமே. ௭

தேட்டாளன்காயன் றுறை சீதக்காதிசிறந்தவச்ர
நாட்டான்புகழ்க்கம்ப நாட்டைவைத்தான்றமிழ்நாவலரை
ஓட்டாண்டியாக்கியவர்கடம்வாயில் ஓருபிடிமண்
போட்டானவனுமொளித்தான்சமாதிக் குழிபுகுந்தே. ௮

வேல்கொடுத்தாய்திருச் செந்தூர்க்கம்பியின் மீதுவைக்கக்
கால்கொடுத்தாய்நின் மணவாளனுக் கவுணியர்க்குப்
பால்கொடுத்தாய்மத வேளுக்குமூவர் பயப்படச்செங்
கோல்கொடுத்தாயன்னையேயெனக் கேதுங்கொடுத்திலையே. ௯

பொல்லாதமூர்க்கருக்கெத்தனை தானபுத்திபோதிக்கினும்
நல்லார்க்குண்டானகுணம் வருமோநடுராத்திரியிற்
சல்லாப்புடவைகுளிர்தாங்குமோ நடுச்சந்தையினிற்
செல்லாப்பணஞ்செல்லுமோ தில்லைவாழுஞ்சிதம்பரமே. ௰

மூவேந்தருமற்றுச் சங்கமும்போய்ப்பதின் மூன்றொடிரு
கோவேந்தருமற்றொருவேந்தன் குடையுமற்றுப்
பாவேந்தர்காற்றி லிலவம்பஞ்சாகப் பறக்கையிலே
தேவேந்திரதாருவொத்தாய் ரகுநாதசெய்துங்கனே. ௰௧

முன்னாளிலன்னை முலையூட்டிமையிட்டுமூக்குசிந்திக்
கன்னமுங்கிள்ளியநாளல்லவே பெண்ணைக்காப்பதற்கே
அன்னமுமஞ்சையும்போலிரு பெண்கொண்டவாண்பிள்ளைநீ
இன்னமுஞ்சின்னவனன்றோ செந்தூரிலிருப்பவனே. ௰௨

புற்கரையிப்பாரையேற விட்டாடுச்சொன்முதல்வருள்ளக்
கற்கரைச்சுப்படிபோதிக் கிருக்கருணைக்கடலைச்
சிற்பரைகுட்டியைப் பெங்கெங்குதிக்குஞ் செங்கருப்பின்
சற்கரைக்கண்டேன் செந்தூரெனுந்தானத்திலே. ௰௩

சின்னஞ்சிறுபிள்ளை செங்கோட்டுபிள்ளைசிவந்தபிள்ளை
பொன்னம்மணிப்பிள்ளை பூலோகமெங்கும்புகழும்பிள்ளை
சொன்னெஞ்சுழல்கின்றசூரனைவென்றசொக்கேசர்பிள்ளை
வன்னக்கிழுப்பிள்ளை செந்திற்குறத்திற்குமாப்பிள்ளை. ௰௪

நாட்டிற்சிறந்ததிருமலையாதுக்க நாகரிகா
காட்டில்வனத்திற்றிரிந்துழலாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற்சிறந்தபடிக்காசனென்றொரு பைங்கிளியைக்
கூட்டிலடைத்துவைத்தா யினிதாவென்றுகூப்பிடுதே. ௰௫

விண்ணுக்குமண்ணுக்கும் பேர்விளங்குதேவேந்திரனென்னு
கண்ணுக்கினியதுரை சீதக்காதிகமலநிகர்
தண்ணுக்கிசைந்தவதனசந்த்ரோதய சாமியிந்த
மண்ணுக்குள்ளேயொளித்தான் புலவோர்முகம்வாடியதே. ௰௬

மறந்தாகிலும்பரைக்காசுங்கொடாமட மாந்தர்மண்மேல்
இறந்தாலவனென்னவிருந்தாலவனென்ன விறந்துவிண்ணேபோய்ச்
சிறந்தநாளுங்காயற்றுறையு சீதக்காதிதிரும்பிவந்து
பிறந்தாலொழியப்புலவோர்தமக்குப் பிழைப்பில்லையே. ௰௭

என்னனைக்கன்றுமுத்தனைக்குனிக்கு மிறையனையனைக்குமேயன்று
மன்னனைக்கொணாதுபின்னனைக்குதவா வன்புளாய்வருந்தவாடுவனே
முன்னனைக்கொன்றுவிசையனைப்புரந்த முதுபகையவன்பிதாவுருமற்
கன்னனைக்கொன்றுவிசையனைப்புரக்கவுந்துவாகாயலாதிபனே. ௰௮

கல்லடிக்குமுளியிரண்டு காதடிக்குளப்பதெளக் கவிதைகெட்டு
பல்லடிக்கிடுகிடெனப் பறையடிக்குநெஞ்சர் தமைப்பாடுவனோ
வில்லடிக்கும்பிரம்படிக்கும் கல்லடிக்குமிரும்பிநின்ற மெய்யனின்ற
செல்லடிக்குந்தடங்கரையிற் சேறடிக்குங்கலைபடிக்குஞ் செந்திலானே.

குட்டுதற்கோபிள்ளைப் பாண்டியனிங்கில்லை.
குறும்பியளவாக்காதைக் குடைந்துதோண்டி
எட்டினமட்டறுப்பதற்கோ வில்லியில்லை.
இரண்டொன்றாமுடிந்துதலை யிறங்கப்போட்டு
வெட்டுதற்கோகவியொட்டக் கூத்தனில்லை
விளையாட்டகக்கவிதை தனைவிரைந்துபாடித்
தெட்டுதற்கோவறிவிலாத் துரைகளுண்டு
தேசமெங்கும்புலவரெனத் திரியலாமே. ௨௰

பாம்பன் - அரவாபரணன் - குளத்திடைக்கல் - நெற்றிக்கண்ணாகிய அக்கினி - தாங்கி - அவன்வாகனமாகிய - ஆடு.

வனக்கொந்தளவஞ்சி பூஞ்சோலைத்தஞ்சிவளருமிரு
தனக்குன்றுசெய்யுந்தொழில்சொல்லவோ தமியேனைக்கண்டாற்
கனக்கும்புளகிக்கும் பாரிக்கும் பூரிக்குங் கண்கறுக்குஞ்
சினக்குந்தனக்குமெனக்குமுண்டாக்குந்தினஞ்சண்டையே. ௭

ஆகசெய்யுள் - ௩௯௪

பலபட்டைச் சொக்கநாதப் புலவர்.

சரராசஜம்பு வைரியென்மாது சரீரமெல்லாம்
பொரராசரத்துக் கிகல்பொருட்டேபசும் போற்கிரண
சுரராசதிவ்ய கிரீடகவிபாடத் துடித்தடிக்கைப்
பரராசராவண ராஜபராக்ரம பாண்டியனே. ௧

காளைமுகிற்குல மெல்லாம்விளங்கு கடிந்திட்டநீ
வேளையுமப்படிச் செய்திலையேவிளை நெல்வயலில்
வாளைகுதித்து வளர்பூங்கமுகின் மடலொடியப்
பாளைமுறிக்குந் துறைவாபராக்ரம பாண்டியனே. ௨

ஆர்க்குங்குளிரு நிலவுபர்கோனின் னலங்கல்பெறு
வார்க்குந்துமமுலை யாட்கவலாகும் வடக்குந்தெற்கும்
மேற்குங்கிழக்கு மொருவெளுப்பாய்நின்று விண்ணையெட்டிப்
பார்க்கும்புகழுக் கிறைவாபராக்ரம பாண்டியனே. ௩

கூரம்பொறுத்த விழியாள்கதலிக் குறத்திவிட்ட
ஈரம்பொறுக்க லருந்திலளேயிந்திர னிட்டசெம்பொன்
ஆரம்பொறுத்த புயமீதிலாயிர நாவுரக
பாரம்பொறுத்த புயலேபராக்ரம பாண்டியனே. ௪

வெறிக்குந்தடக்கொங்கை மீதேயிளம்பிறை வெள்ளிநிலா
எறிக்கும்பொழுது வந்தாயிலையேயிலங்காபுரியைக்
குறிக்கின்றராவணன் பொன்முடிபத்துங் குரங்கைவிட்டுப்
பறிக்கின்றசண்பக மாறாபராக்ரம பாண்டியனே. ௫

சுரும்பேய்க்கும் வாட்கண்ணி பங்காளர்கண்கொண்டு சுட்டுவிட
பெரும்பேய்க்குவேப்பிலைக் காப்புவாய்புண்ணர் சேர்பசுங்கோங்
கரும்பேய்க்குமென்முலை யாரமுதூட்டி யடர்ந்துகொல்லென்
வரும்பேய்க்குவாறுக வுங்குலசேகர மன்னவனே. ௬

பூணித்திலத்துப் புயல்வீரமாறன் புகல்கவிக்கு
காணிப்புலவர் செல்லாதென்செய்வாரிந்த நானிலத்தில்
ஆணிக்கனக மணந்தரிற்பூமணம் யார்கொள்ளுவார்
மாணிக்கத்திந்திக்கி லெனனுகுமற்ற மதுரங்களே. ௭

எண்ணீரமைநாலுக் ககத்திபனுமிவ னென்பதெல்லாம்
வெண்ணீர்மையன்றி விரகல்லவேயிவ் விபனுடைய
பண்ணீர்மைமீதாரும் பராக்ரமமாறன் பதங்கழுவுந்
தண்ணீர்குடித்தல்லவோ கும்பயோனி தமிழ்கற்றதே. ௮

காம்புவனம்புக்க சோளாட்குநின்றன் கழுத்திலிட்ட
வேம்புதனக்கும் விதியில்லையோவெகுண் டாச்சியர்கள்
தாம்பினடிக்க வுடலோடொட்டத் தடைபட்டுச்சிப்
பாம்பினடிக்கின்ற மாவேபராக்ரம பாண்டியனே. ௯

கடந்தூங்குவேழப் பிடற்கேவரக்கண்டு கண்கன்றுக்கா
வடந்தூங்குமாடும் கிளிக்கென்செய்வேன் மணிவாய்திறக்க
விடந்தூங்குபாம்பின் படத்தின்மிசைநிமி ர்த்திடுமென்ப
படந்தூங்கமாடமே புயலேபராக்ரம பாண்டியனே. ௰

சடம்பழுக்குங்கிழட் டுக்குருகீர்தலை சாய்த்துநின்று
முடம்பழுக்குங்கைதை நற்றுறையிற்றெங்கு மூப்புடைக்காய்
குடம்பழுக்குங்கொங்கை யாங்குலசேகரன் கூடலிலென்
உடம்பழுக்குஞ்சிறை யம்பழிகாரருணைத்திலரே. ௧௧

மற்றிருப்பிலாக்கொடைச் சண்பகமாற வரோதயநின்
கொற்றிக்கிரண்டிணை டடங்காதகாரிய மேருகிரிச்
சுற்றிலுங்கீர்த்தி யடங்காதுநின்றுடைத் தோடமூவாக்
கற்றைக்குழலிக்கு மாலடங்காதிது கைகண்டதே. ௧௨

விருத்தம்.

ஒருநாளுதல்பண் டெளங்களிக்க வுபர்வான்முகடு கிழிந்தெறிந்து
மருவார்தருவின் மரக்கொணர்ந்த மதுரைவழிவே லதிவீரா
அரவார்வேம்பின் பசுங்கண்ணி யக்தியிறைவிக் கருளென்று
இரவாதிருக்கநீயளித்தற் கிரங்காதிருந்தா யிதுநாளே.

இரட்டையர்.

தேங்குபுகழாக்கூர் சிவனேவல்லாளியப்பா
நாங்கள்பசித்திருக்க ஞாயமோ-போங்காணும்

கூறுசங்குதோன்முரசு கொட்டோசையல்லாமல்
சோறுகண்டமூளியார் சொல். ௧௪

மூடர்முன்னேபாடன் மொழிந்தாலறிவரோ
ஆடெடுத்ததென்புலியூ ரம்பலவா-ஆடகப்பொற்
செந்திருவைப்போலணங்கைச் சிங்காரித்தென்னபயன்
அந்தகனேநாயக னானால். ௧௫

வேயீன்றமுத்தர்தமை வெட்டினானேயிடையன்
தாயீன்றமேனி தயங்கவே-பேயாகேள்
எத்தனைநாளென்றே யிடறுவான்பாற்குடத்தை
அத்தனையும்வேண்டு மவர்க்கு. ௧௬

மாங்காட்டுவேளாளன் மகளைமருமகன்பாற்
போங்காட்டிலின்பம் புணர்ந்தானே-ஆங்காணும்
மக்கண்மெய்தீண்ட லுடற்கின்பமற்றவர்
சொற்கேட்டலின்பஞ் செவிக்கு. ௧௭

குன்றுங்குழியுங் குறுகிவழிநடப்ப
தென்றுவிடியுமெமக் கென்கோவே-ஒன்றுங்
கொடாதானைக்கோவென்றுங் காவென்றுங்கூறில்
இடாதோநமக்கிவ் விடி. ௰௮

நாணென்றுநஞ்சிருக்கு நற்சாபங்கற்சாபம்
பாணந்தான்மண்தின்ற பாணமே-தாணுவே
சீரூர்மேவுஞ் சிவனேநீயெப்படியோ
நேரார்புரமெரித்த நேர். ௧௯

காளமேகப்புலவரும் இரட்டையரும்.

ஆசுகவியா லகிலவுலகெங்கும்
வீசுபுகழ்க்காள மேகமே-பூசுரா
வெண்கொண்டசெந்தண்லாய் வேகுதேயையையோ
மண்டின்றபாணமென்ற வாய். ௨௰

கட்டளைக்கலித்துறை.

புராதனமான தமிழ்ப்புலவீரிந்தப் புன்குரங்கு
மராமரம்விட்டிங்கு வந்ததென்னேவகை கேட்டிலையோ
தராதலம்வென்ற தமிழ்மாறனையுந் தன்தம்பியையும்
இராகவனென்று மிலக்குவனென்று மிருந்ததுவே. ௨௧

ஆக செய்யுள்-௪௨௰.

ஒப்பிலாமணிப்புலவர் பாடிய அகவல்.

ஆடெறிபடர்ந்த கோடுயரடுப்பில்
ஆம்பிபூப்பத் தேம்பசியுழல
இல்லிதூர்ந்தன பொல்லாவருமுலை
சுவைதொறுஞ் சுவைதொறும் பால்காணாமற்
குழவி தாய்முகநோக்க
மனைவியென்முகநோக்க நானும்
நின்முகநோககி வந்தனென்குமணா. ௧

குமணராசன்.

அந்தநாள்வந்திலை யருங்கவிப்புலவோய்
இந்தநாள்வந்துநீ நொந்தெனையடைந்தாய்
தலைதனைக்கொடுபோய்த் தம்பிகைகொடுத்தென்
விலைதனைபெற்றுன் வெறுமைநோய்களையே. ௨

மாந்தையிலேவாழு மகுடத்தியாகியுனக்
கேந்துதழும்போ விரண்டுளதே-வேந்தர்
முடித்தழும்புன்காலிலே முத்தமிழோர்க்கீயும்
படித்தழும்புன்கையிலே பார். ௩

வெட்புங்காலை வெதும்பிவிழுஞ்சிரம்
செம்பொனகோடி விலையெனச்-சிந்தித்தான்
உம்பர்நாடு முலகினுந்தேடினும்
எம்பிபோலெமக் கியாவருரியரே. ௪

ஆறுபெருக்கற் றருந்திடர்தாம்பட்டாலும்
ஊற்றலமையாதோ ருலகாற்றக்-கூற
வறிமையேயானாலு மென்கலியைமாற்றச்
சிறுமையோசீர்க்குமணா செப்பு. ௫

வில்லைவளையாதே மீசைமுறுக்கிச்சினத்து
முல்லைமலரம்பையென்மேன் மோதாதே-நில்லடா
வந்தாரடாமுருகர் வந்துகடப்பந்தாரைத்
தந்தாரடாமன்மதா. ௬

செந்திற்குமாரன் றிருவழகைக்கண்டவுடன்
வந்திக்குமாரன் வதைக்கிறான்-அந்திக்கு

முன்னையேசென்றென்று மோகமெலாஞ்சொல்லிவந்தால்
அன்னமேகு பிடுசீவன் யான. ௭

தங்கூடனையிருக்கத் தார்வேந்தரில்லோரும்
எங்கடன்றதுக்கே யிச்சிப்பார்-எங்கடனம்
கச்சிருக்கும்பாலிருக்குங் காமபாணங்கள்பட்டு
பிச்சிருக்கும் வேண்டாம் பிளாய். ௮

இடுவோர்சிறிதிங் கிரப்போர்பெரிது
கெடுவாய்நயனே கெடுவாய்-படுபாவி
கூலத்துகாரணனைக் கொன்றாயேகற்பகப்பூங்
காவெட்டலாமோ கரிக்கு. ௯

மையூருங்கண்ணார் மயக்கப்பொருகரும்பு
கையூருங்காமாவுன் கண்ணேனே-செய்யூர்
வளவனையினுணபிரிந்த வாறுனக்குச்சொன்ன
உளவனையினுமெனன்றுரை. ௰

வளவன்-நயினுன்.

ஆழிவாய்ச்சத்த மடக்காதோயான்வளர்த்த
கோழிவாய்மண்கூறு கொண்டதோ-ஊழி
திரண்டதோகங்குறி னாகநாரத்தேரும்
உருண்டதோ பாதாளத்துள். ௰௧

அரவங்கரந்ததோ வச்சுமரமிற்றுப்
புரவிக்கயறறுவிப்போச்சோ-இரவிதான்
செத்தானோவில்லையே தீவினையோபாங்கியெனக்
கெத்தால்விடியுமிரா. ௰௨

மூலையுங்குழலுமுளைப்பதற்குமுன்னே
கலையுமவளையுங் கழன்றாள்-மலையில்
கிரசபளியானேறிவருஞ் சேவின்மணியோசைக்
கிராப்பழியுங்கொள்ளாளிவள் ௰௩

பாண்டியன்றானே பசலைமுலைப்பாலானேன்
ஆண்டிகையிலேந்தியதொன்றானேனே-வேண்டியபோ
துள்ளங்கைத்தேனுனே னோர்மதலைபூத்தபின்
யுள்ளங்கைத்தேனுனே னுனக்கு. ௰௪

முட்டத்துப்பன்றி மூளாதித்திருப்பர்த்தங்கச்
இட்டத்துப்பன்றிக் கிடந்தேனே-கொட்டு
மருங்கிலேசங்கொடுத்த மாலையினர்க்கு
வருங்கிலேசங்கெடுக்கவர். ௧௫

மாதர்க்கிதங்கவி வாணர்க்குச்சாலை வணசர்க்கு
நாதர்க்குநீதியே கடாசாரநன்பிணைக்கவர்க்குக்
கோதற்றவாசகம்பொய்க்குப்பொய் கோளுக்குக்கோளதிலி
லாத்தார்க்கிரட்டிப் பறிவுடையோர்செய்யு மாண்புகளே. ௧௬

குழற்காலரவிந்தங் கூம்பக்குமுதமுகையவிழ்ப்ப
நிழற்காண்மதியன்மன்றோ நின்றிருக்குலநீயவன்றன்
அழற்காலவிற்சடைமீதேயிருந்தவவ்வர்திவல்லான்
கழற்கால்வணங்குதியோ வணங்காமுடிக்கேசவனே. ௧௭

பாட்டானதைவண்டு பாடுஞ்சுழற்சண்பகவல்லிதன்
றட்டாமறையைத்தொழுதேதனினி யென்றலையில்விதி
தீட்டான்கருமுகில்போலேவருமந்தச் சேடனெருமை
மாட்டானினிவரமாட்டான்வந்தாலும் வணங்கலனே. ௧௮

சிமாணுநாமகள்கோமானுமேத்தித் தினம்பணிந்து
பூமாலைசாத்தியசன்சபாபதி பொன்னடிக்குப்
பாமாலைசாத்திநின்றேனைநன்மிகப்பாடுபட்ட
ஏமாவுன்றனினியாமாவென்பாலினி யெய்துதற்கே. ௧௯

தடங்கொண்டகடல்வில்லின் மெல்லெனப்பூட்டிதமதுரத்தில்
வடங்கொண்டுசாத்தி விடங்கொண்டுபார்த்துமணிக்களரும்
படங்கொண்டபாம்பில் பழகியபின்பலைப்பார்வைதனை
இடங்கொண்டவொற்றித் தியாகேசர்புற்றி னிடங்கொண்டதே. ௨௰

விடங்காட்டிகண்டத்திற் றோலுரிகாட்டித்தன்மெய்யிணைப்பும்
றிடங்காட்டிவாளையொருபுறங்காட்டி வணைடேறுமலர்த்
தடங்காட்டியபொழி லாரூர்த்தியாகர் மதுபொற்றட
படங்காட்டியாடிநின்றருலசேழும் பணியென்னவே. ௨௧

புரந்தனைமாலைச் சதுராணைத்தனைப் போகிமுப்
புரந்தனைச்சாதித் திமையாதநாட்டப் புலோமிசைவாழ்
புரந்தனைமாலுந் திருவொற்றியூர்நின் பொன்மணிக்கோ
புரந்தனைக்கண்டனன் காணேனுதிக்குப்புரந்தனையே. ௨௨

வெண்பா.

நல்லம்புலியணிந்தோ ஞளதனுக்கெட்டாகாள்
வில்லம்புடன்கூடி விட்டாலும்-வல்லி

கவுரிகமலாயரை யிரந்ததேசாரிதுவெனக் கமலைமண்சுண்டேனென க், காளையென்பெயரற்கெனமாமையக் கதைகக டடிடையனுரோவெ னச், சிவனொருவர்தூதன்னவந்துதுச்சென்றகனைச்செப்பிலொருபார தமெனச், சேரமாந்திருடிருணாமெனைக்கட்டுண்டசெய்திராமறிவோ மென, சபையினடமாடிருணரனென்னமவ்வாட லரவமறியாதோவெ ன, ஆலமதையுண்டனன் னரனென்ன மண்ணுண்ட வதனையறியோ மோவென, விவரமொடுமலைமகளு மலாயகளுமிவவாறு விளையாடுமிவர் கருணையா, மேவிவருபுத்ரமித்ராகளத்திராருடன்மன்மேலுமிகவாழியே.

நிறையவுளதோ வெளிதோ கொளுவோம்
பிறையைமுடிக்கணிந்தபெம்மான் - உறையும்
திருக்காட்டுப்பள்ளி திரிபாவாய்நீயிங்
கிருப்பாட்டுப்பள்ளியெமக்கு ௭

அடுத்துவருந்தொண்டனுக்காகவந்தகனைக்காலால்
அடர்ந்ததுவுஞ்சத்தியமேயாகும் - எடுத்தவொரு
மாங்கனிக்காவெண்ணெய்முடிபிடித்தமாபாவி
சாங்கனிக்காதித்தவரத்தானை. ௮

குடக்கோடுவானெயிறு கொண்டார்க்குக் கேழன்
முடக்கோடுமுன்னணிமணிவார்க்கு - வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைத்தாண் மேயதொள்ளை
ஊருடையானென்னு முலகு. ௯

விருத்தம்.

சேய்கொண்டாருங்கமலச் செம்மலுடனேயரவப்
பாய்கொண்டானும்பணியும் பட்டீச்சுரத்தானே
நோய்கொண்டானுங்கொளலாகா நூறுவயதாமளவும்
பேய்கொண்டானுக்கொளலாமோ பெண்கொள்ளலாகாதே. ௰

நிட்டையிலேயிருந்து மனத்துறவடைந்தபெரியோர்க ணியமன் றுளைக், கிட்டையிலேதொடுத்து முத்தி பெறுமளவும் பெரியசுக்க ங்கி டைக்குங்காம, கட்டையிலே கதிமயங்கிச் சிறுவருக்குமணம்பேசி விரு மபித்தாலி, கட்டையிலேதொடுத்து நடுக்கட்டையிலேகிடத்துமட்டுங் கவலைதானே. ௰௧

திருந்துதமிழிலக்கணவைந்திணைக்கோவை விருத்தகிரிச்செல்வற் கோதும், பெருந்தகைமையுடையநீயாம்விடுமோலைனெங்கனூர்ப்பிடா ரிகாண்க, இரும்புவியிலொருமுருங்கைக் கொம்பொடியாமற்காத்திங் கிருக்குநேம், முருங்கைதனைவேராங்களைந்தனைந்தனை யென்றாலுனை க்குறைநன்றாமோ. ௰௨

இவர்பிதா.

கயல்வாய்ந்தகண்ணியுமேகின்றவல்லிபங்காவுனது
செயல்வாய்த்தவம்பர்கருமல்லாதவர்க்குஞ்சிரிப்பல்லவோ
இயல்வாய்த்தவெந்தைக்குயானைவாய்த்ததுவுமிங்கின்றெனக்கு
வயல்வாய்த்ததுமனைவாய்த்ததுமைந்தர்கள்வாய்த்ததுவே. ௰௩

முன்னைமொய்ந்தமிழ்ப்புலவன்றனையுண்டுகொண்ட சுவைமுதிர்ச்சியாலே, தன்னியல்புமுதமுனைத் தமையர்முன்னினைக்கவர்ந்து சடங்காளத்தி, மன்னவனுண்டாமென்னது மாதவத்தின்வலிதீர மண்ணின் மீசை, என்னுடன்வந்தவதரித்த விளங்கருணைப்பிரகாச வென்னுங் கோவே. ௰௪

நாணிமென்பசைநான்மென்றுரைத்திடுகையால்
வேணுவானதுகளைந்துபோய்புகுந்ததுவென்றும்
காணலாவதோருருவமெந்நாரியையகண்டால்
பூணுவார்மயல்களையரென்பதும்புதிதோ. ௰௫

அல்லிமலர்ப்பன்னனுமாராய்ந்தறிகவிதை
சொல்லிமிநவரிடைத்தேர்ந்திலயான்-முல்லை
அரும்பிற்பொலியுமணிமுறுவனல்லாய்
கரும்பிற்கணுநிகர்வேதன் காண். ௰௬

வேலையசுவாமிகள்.

ஆண்டதனுமெனை யொவ்வாய்வித்தைதனிற் றமயனினுமதிக மென்றே, பூண்டவுலகதனிலுள்ளோர் புகல்வதுகேட்டிருந்துமென் னைபுதுமைதானே, காண்டகுமாமணியேநல் விளங்கருணைப்பிரகாச க் காளாய்நீதான், மாண்டனையென்றறிந்திருந்து முயிர்தரித்தேன்யா னுமிந்தவன்னெஞ்சேனே. ௰௭

சத்திமுத்தப்புலவர்.

நாராய்நாராய்செங்கானாராய்
பழம்படுபனையின்கிழங்குபிளந்தன்ன
பவளக்கூர்வாய்ச்செங்கானாராய்
நீயுநின்மனைவியுந்தென்றிசைக்குமரியாடி
வடதிசைக்கேகுவீராயின்
எம்மூர்ச்சத்திமுத்தவாவியுட்டங்கி
நனைசுவர்க்கூரைக்கனைகுரற்பல்லி
பாடுபார்த்திருக்குமென்மனைவியைக்கண்டு
எங்கோன்மாறன்வழுதிகூடலில்

ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டன மெனுமே. ௰அ

வெறும்புற்கையு மரிதாக்கிள்ளை சோருமென் வீட்டில்வரும்
எறும்புக்கு மாற்பதமில்லை யென்றெண்ணி யிருங்கலியாமே
குறுமையைத் தவிர்த்த குடந்தாங்கியைச் சென்று கூடியபின்
தெறும்புற்கொள் பானை களங்கொள்ளாமற் றெவுட்டிடுமே. ௰௯

வரதுங்கபாண்டியன்.

அஞ்சலென்றகரதலமுஞ் சடைபடாமுங் கண்ணழு
மலைக்கிசைந்தபுலியுடை மாபுலிச் சஞ்சடையுங்
கஞ்சமலர்ச் சேவடியுங் கனைகழலுஞ் சிலம்பும்
கருணைபொழி திருமுகமுங் கண்களொரு மூன்று
நஞ்சமுண்ட மணிமிடறும் புரிநூலு மார்பும்
நலங்கிளர்வெண்ணீற்றொளியு மறிமானு மழுவும்
பஞ்சடிச்சிற்றிடையுமையா ளொருபாகமுமாய்ப்
பால்வண்ணனுளத்திருக்கப் பயமுண்டோ வெமக்கே. உ௰

அவர் மனைவி.

ஆக்கைபெறும் புழுக்குரம்பை யணைத்தணைப்பாய்ப் பொருளை
யருளொளியைப் பராபரத்தைக் கற்பனைமறிவை
நீக்கமற வுயிர்க்குயிரை மறைவாக்கிந்த
நிறைந்துநின்ற பழம்பதலை நீணிலமேல் மூஞ்சுடராய்ப்
பாக்கியங்கள் செய்தவர்க்குந் தவத்துமாசண் முடிக்கும்
பழவடியார் தமக்குதவு பசுந்துணர்க்கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தா லளவுபடாவொன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியி லடைப்பாம். உக

ஆசு செய்யல் சாலா.

பலபட்டடைச் சொக்கநாதபுலவர்பாடியது.

நின்றபடியளக்கு நீலமேகோடி களிரண்
டென்றுமுளவாங் குடக்கனத்தி யேசுராக் - கொன்றுக்
குளரக்குமரையீந்தா ரொன்றதுக்கென்னு
வளரக்குமரையியா ரவர். க

எடுத்தசனனக்கடொறு மீன்றெடுத்ததாய்மார்
கொடுத்தமுலைப்பாலனைத்துங்கூட்டில் - அடுத்தமணிப்
பைந்தாமரைதயின்மாமாபாலாழியுஞ்சிறிதா
மன்றுசிதம்பரதேவா. உ

முகக்கண்ணையென்றானைமுன்னோர்மொழிந்திடுவார்
அக்கண்ணற்குள்ளதகாரக்கண்ணே - மிக்க
உமையாள்கண்ணென்றனைமற்றான்வேடங்கண்ணென்
றமையுமிதனாலென்றறி. ௩

பாணியிலேபுள்ளிமான்பாகத்தேபச்சைமான்
வேணிதனிலேயோர்வெள்ளைமான் - காணுமலர்ச்
செம்மானுலவுந்திருமறைக்காட்டீசரே
எம்மானுக்கெங்கேயிடம். ச

கட்டளைக்கலித்துறை.

வான்பணிந்தாலவனென்பயனைக்கு மலரிலயன்
தான்பணிந்தாலவன்றலைமேல்சொல்லுந்தாரணியுன்
பான்பணிந்தாலென்கண்மேலிருந்துடைந்துரைக்கும்
நான்பணிந்தாலெனக்கார்சொல்லுவார்சொக்கநாயகர்க்கே. ரு

மெய்க்கேயணியும்பணியேயவன்பேழுடிமேற்கிடந்த
கொக்கேவெண்கூனபிறையேயரசேர்ந்தகொடுபுலியே
அக்கேயுமக்குக்கிடைத்தவுபாயங்களாலமக்குஞ்
சொக்கேசர்பாதத்தைக்கிட்டுமுபாயத்தைச்சொல்லுங்களே. சு

தாண்டித்திரியும்விடையேறிபோவென்றுதாங்கிப்பிச்சை
வேண்டிக்கலியுங்காலந்தள்ளாமல்விருப்பிச்சொக்கர்
ஆண்டித்தொழிலேவிட்டடையோமதுமரக்கரசிருந்து
பாண்டித்துரைத்தனஞ்செய்யதேபிராப்தபட்டவரே. எ

ஆகத்திலேயொருபாதியெம்மைக்களித்தவுடன்
யாகத்திலேயன்றுகொண்டாய்வன்மைமற்றைப்பாதியுமுன்

றேகத்திற்பாதியுஞ்சேர்ந்தாளிருவருண்டேசிவனே
ஏமத்திராமலிருப்பாய்களந்தையுமென்னெஞ்சமே. ௮

துணையானநாரிபுவியையெல்லாம்பெருஞ்சொல்லேவடிக்
கணையானதுபுவியெல்லாமெடுத்துண்ணுங்கச்சிலேயுள்
ளணையாகநின்றுபுவியினைத்தாங்குமெனவிளியான்
பணையார்களந்தைப்பதியார்செயலேயென்பன்னுவதே. ௯

முன்னாளைக்கூப்பிடவோடிவந்தானைமுளரிமலர்ப்
பொன்னானையேறியிருப்பானைப்பூழியன்கைக்கரும்பைத்
தின்னானையென்றுகல்லானைக்கிட்டானைத்திருமதுரை
மன்னானைவீதியிலேறிவந்தானைவணக்குதுமே. ௰

நமக்கின்றொருவரந்தாரீசரவேண்டுமலர்ந்திகழ்க்குங்
குமக்கொங்கைபாகத்துக்கொச்சையுள்ளீர்கொடுங்கோளரவிற்
கிமைக்குப்பிறையையளித்தாலதற்குமிருப்பசிபா
முமக்குந்தலைச்சுமைபோமெங்கணமாறுமுயிர்பெறுமே. ௰௧

ஆனையுரித்துமதகடனைப்போர்த்திட்டடியும்பட்டு
மானமழிந்தங்கிரந்தமதுரைச்சொக்கர்
ஞானமிகப்பெற்றுவாழ்வதெல்லாஞ்சொக்கநாயகியாள்
பானைபிடித்தமுகூர்த்தத்தினால்வந்தபாக்கியமே. ௰௨

ஆய்முத்துப்பந்தரின்மெல்லணைமீதின்னருகிருந்து
நீமுத்தந்தாவென்றவாகொஞ்சுபவேளையினித்தனித்தம்
வேய்முத்தரோடெக்குறைசொல்லாமெல்லமெல்லச்சொன்னால்
வாய்முத்தஞ்சிந்திவிடுமே மெல்லமெல்லவிடிவன்னையே. ௰௩

குதியானமனையுதைத்துள்ளங்கானினிங்கூனிமிர
மதியாகந்தேய்த்தவ்விலங்கேசன்மாமுடிபத்துநக
நுதியான்மிதித்துமுயலகன்பேணிதலங்கவின்னு
மிதியாநின்றுலருளெங்கேசொக்கேசர்தம்மெல்லடிக்கே. ௰௪

மண்ணென்றமண்டலமெல்லாப்புரக்குமழிகிசற்றுந்
தண்ணென்றநெஞ்சந்தரித்திலனேதனுவேடனெச்சில்
உண்ணென்றபோதுண்டவர்சொக்கர்பாதிபுடலம்மைப்
பெண்ணென்றறிந்துமடித்தானெவ்வாறுபிரப்புகொண்டே. ௰௫

இன்றிருக்கவேண்டியிவ்வாறிருக்குமோவெழில்சேர்களந்தைக்
குன்றிருக்குங்கோபுரநோக்குமக்கூறறுபோல்
அன்றிருக்கவேணடுமென்னவினை தீவினை தீவினையாமிரண்டும்
என்றிருக்குமோவினைத்தெனைகளக்காடனையாபெறவே. ௰௬

மாதாம்படியுண்டுமெய்சிவந்தான்குழல்வைத்திசைத்துச்
சேதாம்பலத்தக்கனிவாய்சிவந்தான செம்மலர்த்திருவின்
கூகாந்தனந்தைத்துஞ்சிவந்தானவா தூதுசென்று
பாதாம்புயஞ்சிவந்தான்கிவந்தான மல்லேப்பல்லவனே. ௰௭

பாடுந்தமிழ்க்குச்சிவந்தெழுந்தான்மல்லைப்பல்லைப்பல்லவர்கோன
காடுஞ்செடியுந்திரியாதிரட்டைக்கடுக்கனசெல்லு
போடும்பொழுதென்னைப்பூட்டிமோவற்றப்புல்லைரக்கொண
டாடும்பொழுதின்கண்ணாநிலேசிறைறடிக்கின்றதே. ௰௮

நான்றெண்டனிட்டகனங்குழலாளையென்கண்மணியை
தேனிருண்டைவாய்ச்சியைத்தென்கூடல்வாழ்சிறு பெண்பிள்ளையை
யான்றெண்டனிட்டபொழுதேயமனெனக்குமடி
என்றெண்டனிட்டவிண்ணப்பமென்றோலையெழுதுவனே. ௰௯

மற்றொருவரைக்கண்டதுண்டோசத்தியவாசகராய்
உற்றோர்கஞ்சுவெண்ணெய்க்கீறன்காய்க் கொருகோடிபொய்கள்
சொற்றோனுந்தழைமலர்சாட்சியென்றுசொன்னேனுமலலால்
கற்றோர்கள்வம்மினகள்செம்மினகள்பொம்மினகளந்தையிலே. ௨௰

அண்டத்தபராருமாயனும்வேதனுமந்தணரும்
பணடைத்தனைதவஞ்செய்தனரோமணப்பந்தலிலே
துண்டப்பிறைபணிசொக்கரைத்தகலிக்குநீறணிந்து
கண்டத்தைநீட்டினையேகூடல்வாழுங் கயற்கண்ணியே. ௨௧

அற்பின்றதாயென்றுனைப்பணிந்தாலென்னவதியெல்லாம்
பொற்பினநபூஷணயபோற்குறித்தாய்புகழ்க்கூடலில்வாழ்
கற்பின்றகட்டிக்கரும்பேயுனக்குக்கனனெஞ்சதுதான
வெற்பீன்றவாசனையோவுள்ளவாறுவிளம்பெனக்கே. ௨௨

பேயல்லவோவொருவேயோவரந்தந்துபேசிடுங்கல்
லாயல்லவேநின்மனங்கெட்டியானதுமற்புதந்தான
நீயல்லவோமதுரேசர்பங்குற்றவணியெனக்குத்
தாயல்லவோபிள்ளைநானலலவோசிவசாம்பவியே. ௨௩

இப்படியிப்படி யென்றாகிலுமெனக் கேதெரியச்
செப்படிசெப்படி யம்மாமதுரைச் சிவானந்தியே. ௪௰

செப்பத்திலுன்னைத்தொழுவாயிரங்கண்ணுஞ் சொல்லும்பொல்லேன்
தப்பாக்தவறத் தொழுதாலுஞ்சொக்கர் தளம்புயத்துக்
கொப்பத்திரண்ட கொங்கையுனைவயவ மொன்றுக்கொன்று
முப்பத்திரண்டுகண் வேண்டுங்கண்டாயென் முகத்தினுக்கே. ௪௧

துடியார்கரத்து மதுரேசரேயும்மைத் துள்ளியசேற்
கொடியாளடித்துங் குற்றமனறேகிழக் கோதையிவள்
அடியாளென்றேசுட்ட பிட்டையெல்லாமள்ளி யள்ளித்தின்று
வடியாநதியிற்கரைத்துவிட்டாரவள் வலவினையே. ௪௨

காரஞ்சொன்னகண்ட தென்னாளொதொடுத்த கவிக்கெவர்கள்
ஊரஞ்சொன்னதோலங் திருத்ததில்லைவேலை யுதவுனக்கே
பாரஞ்சொன்னேனின்னம்பராமுகமேநிது பத்துலட்சம்
தாரஞ்சொன்னகாயென்னு வாய்சிவகாம சவுந்தரியே. ௪௩

ஒருபாதிமால்கொள மற்றொருபாதி யுமையவள்கொண்
டிருபாதியாலு மிறந்தான்புராரி யிருநிதியோ
பெருவாரிதியிற் பிறைவானிற்சர்ப்பம் பிலத்திற்கற்ப
தருவானபோஜ கொடைநின்கையோடெனக்கை தந்தவனே. ௪௪

பாலனைப்பழித்தல்.

அரும்ப லகாமுனம் பூமணஞ்சொற்பொரு ளாகமுயிர்
கரும்பாஞ்சுதைபென்று மெனவெணயும்போலொத்தகாதலரைப்
பெரும்பாவினலனங் கங்காசனத்தைப் புரிப்பதுபோல்
சுரும்பாய்புலவர் யமனென்னைசெக்கைத தோன்றினையே. ௪௫

அரும்பாக்கியகொங்கை பாலாக்கியவுங்க ளப்பனெஞ்சை
இரும்பாக்கியென்னெஞ்சைப் பித்தனாக்கியவ் வேந்திழையைச்
சுரும்பாக்கினையும் வேம்பாக்கியிவ்வண்ணங் கண்டனையே
பெரும்பாக்கியமல்லவோயுனைப் பெற்றதுவே. ௪௬

கலவிமேற்பிரிதல்.

விண்ணுக்குமாமதி காயவெங்காம வெரிகொளுந்தப்
பண்ணுக்குமாமொழி மாதங்கமாம்பஞ்ச பூதியமபோம்
உண்ணுக்குழகுச்செவியாக்கையற்ற கடத்திலகும்
பெண்ணுக்குவார்த்தைப்போலொதுவாரும பிரிபவரே. ௪௭

உனக்கின்றியான்செய்த குற்றமொன்றில்லை யுனைப்பிரிந்தால்
வனக்குன்றிலேறிவிழ வறியேன்உண்மை சேர்மயிலே
எனக்கென்றுவட்டமிட்டண்ணாந்துவிம்மியிருக்குமுன்றன்
தனக்குன்றிலேறி விழவேவணினல்குற் றடாகத்திலே. ௪௮

கண்ணாம்புதீட்டநல் லாள்காட்டமோதிரஞ் சூட்டமலர்க்
கண்ணாரைக்கூட்டவிரனான்கிருக்கக் கதிர்க்கம்பிபோல்
எண்ணாருவிரற் கேதா பூலோபருக் கேதுகண்டாய்
சண்ணார்நுதலன்னனால் செய்யணிகர்செந்தில் சர்த்தனனே. ௪௯

நிணம்போதத்தள்ளிப் பெருப்பூதம்போலப் பின்னேற்றுசெத்த
பிணம்போற்கிடந்து புரளுவர்காண்பிறர்க் கிட்டுவைத்த
பணம்போனபின்பு விவேகமுண்டாகுமப் பஞ்சைகள்வங்
கணம்போதுங்கறுப் பாதென்மாவையிற் காவலனே. ௫0

ஏவைக்குக்கூன்சிலை தொட்டானனங்க னிருவிசும்பில்
தீவைக்குந்திங்கட் குடையெடுத்தானென்றற் றேருகைத்தான்
காவைக்குங்கண்மணி கஸ்தூரியின்ற கறுப்பன்வளை
மாவைக்கும்பாவைக்குப் பூவைக்கும்போது வடுவைக்குமே. ௫௧

பொன்னகத்தார்பணி மாயோன்கரந்தைப் பொருப்புல்வரும்
மின்னண்முகக்கண் டனஞ்சாயல்போற்பெற வேண்டியன்றோ
வந்நாட்கமல மலர்கடன் பேரு வணிமயிலும்
தன்னலயணிசங்கரன்வேலைத் தாங்கியதே. ௫௨

குண்டைக்கொருத்தனைக் கூத்தாடிப்பித்தனைக் குண்டுணியைக்
கண்டக்கருப்பனைப் பிள்ளையதினைனியைக் காணவயன்
மண்டைக்கரத்தனைக் கண்ணப்பனெச்சிலை வாரியுண்ட
பண்டைப்பறையனையோ தேவனென்று பகருவதே. ௫௩

அந்தக்கரும்பள்ளி பாசாங்குசத்திகண் ணம்பண்டச்சி
மைந்தம்விடச்சி குறத்திகுமாயி கலிவலைச்சி
சந்தம்புழுக்கச்சி யாம்பனையோனுக்குத் தங்கச்சியாம்
இந்தப்பரச்சியைப்போ சிவகாமியென் றேத்துவதே. ௫௪

நிலமேழளந்த நெடுமால்பணியு நிமலர்பொன்னம்
பலமே வுதில்லைப் பதிநடராயர் பனிவரையில்
கலமேதிமிர்கல மேசக்கமேகர் சயலினமே
சலமேசஞ்சலமே யென்றுதிருவென் சஞ்சலமே. ௫௫

பொற்டக்கயம்பிடி யென்றான்மதனுமிப் பூவையுமா
தரடக்கமுஞ்சற் றறிந்திலனேமலர்த் தாள்வணங்கா
முரடக்கடவுடக் கெடிமன்னர்வெற்றி முடிபிடுங்கும்
கரடககளிற்றண்ண லேவல்லைமாநகர் காளத்தியே. ௫௬

கவியாகுமாதினைப் பெற்றோன்புலவன்கற் றோனணையாம்
செவியாரக்கேட்டங் குணர்வான்சகோதரன் செந்தமிழ்க்கு
தவியாவருமை யறியான்பகையவன் றானிலையேல்
புவியாகுமண் ணுக்கு ளென்பலமாமந்தப் பூங்கொடிக்கே. ௫௭

சேராதவேடன் செருப்பாலடிக்கவுந் தீண்டவுந்தன்
நீர்வாயுமிழவு முச்சிட்டப்போடவு நீண்டசிலைத்
தாராலடிககவுங் கண்ணீர்த்ததும்பவுந் தாய்தமர்கள்
ஆராகிலுமில்லையோ திருக்காளத்தி யப்பனுக்கே. ௫௮

ஒட்டாகவொட்டியுங் காம்பொன்னின்மாப்பொன் னுபாயமதாய்த்
தெட்டாதிரான்பணி செய்யாதிரான்செம்பொன் மேருவினைக்
கட்டாகக்கட்டிக் கடுகளவாநிறை காட்டவல்ல
தட்டானுக்கஞ்சியல்லோவணிந்தான்சிவன் சர்ப்பத்தையே. ௫௯

ஏராட்டும்பூந்தொங்கணமோகனக்கா ரற்கினியசுகம்
பாராட்டநானினி யாளல்லவேபசு மெனகுழவி
தாராட்டவுஞ்சங்கிற் பால்வின்ளைக்கூட்டித் தடவிமஞ்சள்
நீராட்டமையிடப்போமோயெனக்குள்ள நேரமுமே. ௬௰

விருத்தம்.

மட்டாருந்தெங்களந்தைப்படிக்காச னுரைத்ததமிழ்வரைந்தவேட்டைப், பட்டாலேசூழ்ந்தா லுமுவுலகும்பரிமளிக்கும்பரிந்தவேட்டைத், தொட்டாலுங்கைம்மணக்குஞ் சொன்னாலும்வாய்மணக்குந் துய்ய சேற்றில், நட்டாலுந்தமிழ்ப்பயிராய்விளைந்திடுமேபாட்டினிட னளினந் தானே. ௬௧

வெண்பா.

ஆலெங்கேயங்கே யரும்பறவையாற்றுயிலும்
மாலெங்கேயங்கே மலர்மடந்தை-கோலஞ்சேர்
செங்கேதகைமணக்குஞ் செங்குன்றையூரெங்கே
ஆங்கேயிரவலரெல் லாம். ௬௨

உவரைச டுமோ வுலகந்தனைச்சுடுமோ
ஆரைச்சுடுமோ வறியேனே-நேரே

பொருப்புவட்டமான்முலைப் பூவையரேயிந்த
நெருப்புவட்டமான நிலா. ௬௩

நற்றோரணவீதி நண்ணும்வல்லைக்காளத்தி
கற்றோர்தமக்களிக்கும் கையேகை-மற்றோர்கை
வேங்கைபலகைமுகை வேட்கைபுலைகைநகை
காங்கையமுகைவிழுகை. ௬௪

போசநீபோர்புயலாப் பூமுழுதும்பொன்மாரி
வீசுவாயங்கதிலோர் விந்தேனும்-பேசுமென்மேல்
பட்டதில்லையென்வறுமை பாரக்குடையாகி
மூட்டக்கவித்திடுத லால். ௬௫

காலையரவிந்தங் கழுநீருடன்கலந்தால்
மாலையரவிந்த மயக்காதோ-பாலைப்
பழிக்கின்றமென்மூலையீர் பாண்டியனுரை
அழிக்கின்றதென்னவது. ௬௬

பாண்டியனார்-கூடல்-அது-புணர்ச்சி.

ஆக-செய்யுள்-௬௬.

———(-)———

பொய்யாமொழிப்புலவர்.

——)*(*)*(——

வாய்த்தவயிரபுர மாகாளியம்மையே
ஆய்த்தமணலி லணிவரையிற்-காய்த்த
கதிரைமாளத்தின்னுங் காளிக்கனேறுங்
குதிரைமாளக்கொண்டு போ. ௧

இவருபாத்தியாயர்.

பொதியிலகத்தினைப் பொய்யாமொழியாய்ச்
சிதைவில்புலவர் சிகாமணியாய்-துதிசேருஞ்
செங்காட்டங்கோட்டத் துறையூரனுந்தலத்தில்
தங்காட்டங்கொண்டிருப்பாய் தான். ௨

அகவல்.

வாழுசோழவேந்தன் வாய்மொழிகேண்மோ
ஊழிநிலவெறி மாளிகையினவயிற்
கட்டிளங்கணவன் கவின்பெறுசேக்கை
சேர்ந்துறிமனைவி நெடிதுதுயில்கொளக்

செல்லக்கிடமீ னெனக்கிடந்தருகெனச்
சொல்லியநண்பன் றனிச்செல்பவனே
நாளுமேகுவ னற்றணையவர்க்கே. ௩

வெண்பா.

அன்றுநீசொலலக் கிடவென்றாயாயிழையோ
டின்றுநீவானுலக மேறினாய்-மன்றல்கமழ்
மானைக்கும்வேல்விழியார் மாரனைகண்டியீர்
னைக்காசெல்லக் கிட. ௪

பூவேந்தர்முன்போற் புரப்பாரிலையெனினும்
பாவேந்தருண்டென்னும் பான்மையாற்-கோவேந்தன்
மாறமுறிய மதுராபுரித்தமிழோர்
வீறணையேசற்றேமித. ௫

உங்களிலேயானொருவ னொவ்வுவனோவொவ்வேனோ
திங்கட்குலனறியச் செப்புங்கள்-சங்கத்தீர்
பாடுகின்றமுத்தமிழ்க்கென் பைந்தமிழுமொக்குமோ
ஏடெழுதாரோரெழுவீ ரின்று. ௬

பொன்போலுங்கள்ளிப் பொறிபறக்குங்கானலிலே
என்பேதைசெல்லற் கியந்தனளே-மின்போலும்
மானவேன்முட்டைக்கு மாறாயதெவ்வர்போங்
கானவேன்முட்டைக்குங் காடு. ௭

முருகக்கடவுள்.

விழுந்ததுளியந்தரத் தேவேமென்றும் வீழின்
எழுந்துசுடர்சுடுமென் றேங்கிச்-செழுங்கொண்டல்
பொய்யாதகாலத்திற் பெய்வளையுஞ்சென்றனளே
பொய்யாமொழிப்பகைஞர் போல். ௮

ஔவையார்.

ஐம்பொருளுநாற்பொருளு முப்பொருளு மெய்த்தமைத்த
செம்பொருளையெம்மறைக்குஞ் சேட்பொருளைத்-தண்குருகூர்ச்
சேய்மொழியதென்பர் சிலரியானிவ்வுலகில்
தாய்மொழியதென்பேன் றகைத்து. ௯

சேய்மொழியோ காய்மொழியோ செப்பலிரண்டுமொன்றே
வாய்மொழியையாரு மறையென்பர்-வாய்மொழிபோல்
ஆய்மொழிதன்சால வுளவெனினுமம்மொழியுந்
காய்மொழியவென்பேன் றகைத்து. ௰

மதுரைச் சொக்கநாதர்.

கொங்குதேர்வாழ்க்கையஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாதுகண்டதுமொழிமோ
பயிலியதுகெழீஇயநட்பின்
மயிலியற்
செறிஎயிற்றரிவைகூந்தலின்
நறியவுமுளவோநீயறியும்பூவே. ௰௧

அகவல்.

மதிமலிபுரிசைமாடக்கூடற்
பதிமிசைநிலவும்பாணிறவரிச்சிற
கன்னல்பயில்பொழிலாலவாயின்
மன்னியசிவன்யான்மொழிந்திடுமாற்றம்
பருவக்கொண்மூப்படியெனப்பாவலர்க்
கொருமையினுரிமையினுதவியணிதிகழ்
குருமாமணிதிகழ்குலவியகுடைக்கீழ்ச்
செருமாவுகைக்குஞ்சேரலன்காண்க
பண்பால்யாழ்பயில்பாணபத்திரன்
தன்போலென்பாலன்பன்றன்பால்
காண்பதுகருதிப்போந்தனன்
மாண்பொருள்கொடுத்து வரவிடுப்பதுவே. ௰௨

அங்கம்வளர்க்கவரிவாளினெய்தடவிப்
பங்கப்படவிரண்டு கால்பரப்பிச்-சங்கதனைக்
கீர்கீரெனவறுக்குங்கீரனோவென்கவியைப்
பாரிற்பழுதென் பவன். ௰௩

நக்கீரர்.

சங்கறுப்பதெங்கள்குலஞ் சங்கரர்க்கங்கேதுகுலம்
பங்கமுறச்சொன்னோர் பழுதாமோ-சங்கை
அரிந்துண்டுவாழ்வோ மரனாரைப்போல
இரந்துண்டுவாழ்வோமினி. ௰௪

திருஞான சம்பந்தமூர்த்தி.

கடியுண்டநெடுவாளைகராவிற்றப்பிக்
கபத்துக்குள்ளடங்காமல்விசும்பிற்பாய
அடியுண்டவுயர்தெங்கினபழத்தார்பூகம்
அலையுண்டுகுலைசிதறு மாலிநாடா

படியுண்டபெருமானைப்பரிந்துபாடிப்
பதம்பெற்றபெருமானேதமியேன்பெற்ற
கொடியொன்றுநின்பவனிக்கெதிரேசென்று
கும்பிட்டாளுயிரொன்றுங்கொடுவாளே. ௧௫

திருமங்கையாழ்வார்.

வருக்கைநறுங்கனிசிதறிச்செந்தேன்பொங்கி
மடுக்கரையிற்குளக்கரையின்மதிலிலோடப்
பெருக்கெடுத்துவண்டோலஞ்செய்யுங்காழிப்
பிள்ளையார்சம்பந்தப்பெருமாள்கேளீர்
அருட்குலவுமயிலைதனிலனலால்வெந்த
அங்கத்தைப்பூம்பாவையாக்கினேமென்
றிருக்குமதுதகவன்றுநிலவால்வெந்த
இவளையுமோர்பெண்ணாக்கலியல்புதானே. ௧௬

சேமங்குருகையோசெய்யதிருப்பாற்கடலோ
நாமம்பராங்குசனோ நாரணனோ-தாமம்
துளவோவகுளமோ தோளிரண்டோநான்கோ
உளவோபெருமா னுனக்கு. ௧௭

சங்கத்தார் அகவல்.

காலைஞாயிறுகடுங்கதிர்பரப்பி
வேலையுங்குளனும்வெடிபடச்சுவறித்
தந்தைதாய்மக்கண்முகம்பாராமல்
வெந்தசாதமும்வெவ்வேறருந்திக்
குணமுடனுளுங்கொடுத்துறவாண்ட
கணவனைமகளிர்கண்பாராமல்
பழுத்தவுடலம்பசையறவற்றி
விழித்தறவிழியெலாம்வேறுறதுவிழியா. ௧௮

அறவுணையன்றிமறவுணைபெருகி
உறவறமொழிந்தவூழிகாலத்தில்
தாயிலார்க்குத்தாயேயாகியும்
தந்தையிலார்க்குத்தந்தையேயாகியும்
இந்தமாநிலத்திடுக்கணடர்
வந்துதோன்றியமாநிதிக்கிழவன்
நீலஞ்சேரிநெடுமாலானன்
ஆலஞ்செழியினன்றசடையன

பிறந்தும்பிறர்கேடுநினையான்
பிறர்பொருள்வவ்வான்
மறந்தும்போகான்வாய்மையுங்குன்றான்
இறந்துபோகாச்செம்மையுங்காத்தான்
வருந்தல்வேண்டாம்வழுதி
இருந்தனமிருந்தனமிடர்கொடுத்தனமே. ௫௧

திருமழிசையார்.

கணிகண்ணன்போகின்றான காமருபூங்கச்சி
மணிவண்ணா நீயிங் கிராதே-துணிவுடனே
செந்நாப்புலவன்யான் செல்கின்றேனீயுமுன்றன்
பைந்நாகப்பாய்சுருட்டிக் கொள். ௨

ஆகசெய்யுள் ௫௫௩.

—*—*—

சொக்கநாதப்புலவர்.

——(*)——

சீர்காழுத்தமுகிற்காத்தான்கஸ்தூரிபூபனாருள்சேயாவென்று, போர்க்குப்புமிலாததொண்டைவளநாட்டிருக்குமுசிரக்லோ, ஆகறுபயபொன்றுவ்சாலியவழைத்தாலுமாமுன்னே யணபிருலே, போகறுப்பவிறஞ்சிவப்பணகோத்தியினல்வவளுபபமெனப பேசுவேமே.

பிள்ளைவயதினிற்கல்விகற்றேம்பின்பு
பெரியசுரவாகனமும்பெற்றேம்பூமி
உள்ளளவுங்கீர்த்திநிலைநிறுத்திக்கொண்டோம்
ஒருகுறையுமில்லையினியுன்பபக்கேணமோ
தெள்ளிலகுசிதம்பரத்தைத்தெரிசித்தோமபின்
சேற்கருங்கட்டளவக்கைகதெய்வயானை
வள்ளிபுணர்சிறப்பனைத்துதித்தோமெந்தன்
மாவைவளர்கறுப்பவுன்னைவாழ்த்தினேமே ௨

எல்லப்பனம் மைப்பன திருவேங்கடராம மொழிந்தோரளவ், வா
க்கைகொண்டமறுடனே மாதகி [illegible]

துளைபடுமாமரபோரேழுமெய்தவன் றூதுகவி
உளைபடுவாரிதியானதேகடந்த தொளிர்தரள
வளைபடுவாவிமணலைவமனைகூதத்தன் வருத்தகவி
தளைபடுகாலுடனேகடலேழையுந் தாண்டினனே. ௰௫

தூங்காதராதலமெங்குமொருமிக்கத் துய்த்தரா
சிங்காதராகரந்தாளேறிந்தேமல்கச் சேலவந்த
கெங்காதராநின்புகழ்கேட்டசைப்பான் கிரீடமென்றே
வெங்காதராவுக்குச்செய்தானிலைமலர் வேதத்தனே. ௰௬

புரசைவடமலைப்பாவிருட்கயம் பூண்டுகொண்டு
முரசைவடமலையப்பாலுஞ்செலல முழக்கஞ்செய்தோய்
சிரசைவடமலையப்பம்பிணைவைத்துத திருக்கணைவளர்
இரசைவடமலையப்பாவிப்பாருக்கோ ருந்திரனே. ௰௭

சோதிச்சவரிவிழிக்கோபுரவில்லை தூயகுழல்
கோதிச்சவரிமுடிக்கரியாள்கொண்ட கோலமென்னே
நீதிச்சவரிப்பெருமாளென்றே நினைந்தாகப்
போதிச்சவரிவட்காரோவறிகிலன் பூங்கொடியே. ௰௮

சொல்லுக்கினிபகழூக்குறைநோயுமைச் சொல்லவென்றால்
அல்லற்பிழைப்புப்பிழைக்குவிட்டீர்முப் புராதிபர்மேல்
வில்லைக்குனித்தெய்யமாட்டாதநீரந்த வேளைதனிற்
பல்லைத்திறந்துவிட்டீரிதுவோவுடம் படைத்தொழிலே. ௰௯

துயிலையிலேயிடர்துன்னையிலே செவ்வர்குழையிலே
பயிலையிலேயிருட்பாதியிலேபசும் பாலனத்தை
அயிலையிலேவயதாகையிலே நமக்கார்துணைதான்
மயிலையிலேவளர்சிங்காரவேலர் மயிலையிலே. ௨௰

போதாசிவகுருநாதாகலவைபுழுகொடுசெவ்
வாகார்ந்தகொங்கைக்குறமாதுவள்ளிக்கு வாய்த்திடுமின்
பாதாருக்ற்செற்றவேல்விடுத்தாலென் பாகமையயறுக்
கர்தாமணமிரங்காகாசிவகிரிக் காங்கேயனே. ௨௧

சாப்பிள்ளைபிள்ளைக்கமிக்கிச்சைபட்டுவை யைக்கணைமேன்
மாப்பிட்டுவந்தமாலேசமேமை யனைநின்னைக்
கூப்பிட்டுநின்றகுனிந்தொருகோலக் சொம்பாற்றவிப்
பூப்பட்கண்ணிச்சபமாக்கினுன்னைப் புயல்வண்ணனே. ௨௨

உம்பரைவாழ்வித்ததஞ்சங்கண்டோமெண் புரமெரித்த
அம்பரையேற்றியசூலங்கண்டோமரு ளுங்குறைவில்
நம்பூரைபாகமுங்கண்டோமவர்திரு நாமஞ்சொல்லா
வம்பரையுங்கண்ணிற்கண்டோம்வெண்காடனை வாழ்த்துங்களே. ௨௩

மாடேறுதாளுமதியேறுசென்னியு மாமலரோன்
ஓடேறுகையுமுடையார்தமக்கிட மோங்கியநெற்
கூடேறுசங்கஞ்சொரிமுத்தைமுட்டை யென்றேசயலங்
காடேறுமன்னஞ்சிறகாலணைக்குங் கழுக்குன்றமே. ௨௪

நெருப்புக்கருக்கச்சிவப்புள்ளமேனியர் நீள்கனகப்
பொருப்பக்குனித்துப்புரமெரித்தார்க்கிடம் போர்க்களிற்றின்
மருப்புக்கண்முத்துமவளர்கழைமுத்தும வளைக்கண்முத்துங்
கருப்புக்கண்முத்துமதிக்குலங்காட்டுங் கழுக்குன்றமே. ௨௫

ஆலங்கிடக்குமனத்தார்க்கொருநன் றியம்பிவிட்ட
கோலங்கிடக்குங்கிடக்குங்கண்டாய் குறையாகருணை
சீலங்கிடக்குமனத்தார்க்கொருநன்றி செய்யில்வெகு
காலங்கிடக்குங்கண்டாய்வணிகர்செந்தில் காத்தவனே. ௨௬

வெண்பா.

வேளுக்குவாம்பரியும் வில்லூர்குமேழுஞ்சேல்
வாளுக்குங்கண்டம்வார் வாய்க்காடு-நாளும்
மருதப்பனையே வளர்த்துவிட்டதாலே
மருதப்பனையே வணங்குவார். ௨௭

சிந்தாமணிசங்கு தேனுமலர்த்தாமரைசீர்
ஐங்தருவுநின்னவே யாயிருக்க-வங்கேதான்
கச்சவிடமேயுண்ட கண்டாகடைதோறும்
பிச்சையிரந்துண்டதென்ன பேசு. ௨௮

அந்திக்கார்வந்துமய லாற்றவாரன்னைபிடி
வந்திககார்வந்து வழக்குரைப்பார்-நந்திக்கார்
கச்சிக்காளத்திக்கா காதலுரைப்பார்கனக்க
கச்சிக்காளத்திக்கார் காண். ௨௯

இருப்போமென்றாலு மிராதுளமானையிக்
கருப்போமென்றாலுக் கசக்குர்-விருப்பாரும்
காசண்முகனைக் கடல்புடைசூழ்காவளயவாழ்
மாசண்முகனை மறந்து. ௩௰

இரப்பார்க்குப்பெண்கொடுத்த தென்னமதியம்மானை
என்றல்லோ மண்ணுண் டிருந்தனர்காணம்மானை. ௨

ஆதாரமாகுடந்தை யாதிகும்பேசுரனார்
கோதாடுமென்மதனைக் கொன்றெரித்தாரம்மானை
கோதாடுமென்மதனைக் கொன்றெரித்தாராமாயின்
மாதாபிதாக்கள்பழி வாங்காரோவம்மானை
வாங்குதற்குமுன்வாயின் மண்விழுந்ததம்மானை. ௩

தொல்லுலகிலெல்லோருஞ் சொன்மாங்கனியொன்று
நல்லதொருகாஞ்சி நகரிலுண்டோவம்மானை
நல்லதொருகாஞ்சி நகரிலுண்டோயாமாயின்
எல்லார்க்குத்தானே யினிக்குமோவம்மானை
இனித்திருக்குமொருவேளை யெரித்திருக்குமம்மானை. ௪

மட்டுவார்கூந்தலு மையாண்மனமகிழக்
கட்டுமாவொன்றுளது கச்சியிலேயம்மானை
கட்டுமாவொன்றுளது கச்சியிலேயாமாயின்
இட்டமாநற்கனிகா யில்லையோவம்மானை
இல்லாமற்கல்லா லெறிவாரோவம்மானை. ௫

கல்லாலின்கீழிருக்குங் காளத்திநாதருக்குப்
பொல்லாச்சிலந்தி புகுந்ததுகாணம்மானை
பொல்லாச்சிலந்தி புகுந்ததுவேயாமாயின்
வல்லானொருபணிக்கன் வாரானோவம்மானை
வந்தல்லோபண்டு வடுபட்டதம்மானை. ௬

ஆரத்தடல்வயல் சூழாமாவைவாழழகர்
தாரொத்தமேனி தழலொத்ததம்மானை
தாரொத்தமேனி தழலொத்ததாமாயின்
ஈரக்கங்காநதியா னிருப்பதேனம்மானை
ஈரம்பெருநெருப்புக் கில்லையேயம்மானை. ௭

மாசிலாத்தென்விரிஞ்சை மரக்கசகாயலிங்கர்
வேசியர்பாற்றூதுசொல்லி மீண்டனர்காணம்மானை
வேசியர்பாற்றூதுசொல்லிமீண்டனரேயாமாயின்
வீசமுனைவெட்கமவர்க் கில்லையேயம்மானை
இல்லாமற்றலையிரக்க மேன்வந்ததம்மானை. ௮

வற்றாதவைகையிலும் வாள்விஜயன் றன்கையிலும்
பற்றுமலனண்ணலடி பட்டனகாணம்மானை
பற்றாரில்லாதசிறு பிள்ளைபோவம்மானை
பெற்றாரில்லாதசிறு பிள்ளைபோவம்மானை
பிள்ளைமதிபுடைய பித்தர்காணம்மானை. ௯

பூங்காவனஞ்சூழும் புள்ளிருக்கும்வேளூரான்
பாங்கானதென்மதுரைப் பாணன்காணம்மானை
பாங்கானதென்மதுரைப் பாணனேயாமாயின்
தாங்காதிழையெடுத்துத் தைப்பனோவம்மானை
தையலுக்கல்ல சமர்த்தன்காணம்மானை. ௰

இப்பூமிதன்னிலே பெல்பாந்திருத்தணியில்
முப்பூவிளையு முருகருகேயம்மானை
முப்பூவிளையு முருகருகேயாமாயின்
அப்பவருக்கங்கே பரிதல்லோவம்மானை
அவர்க்குமுகமாறு மப்பரிதோவம்மானை. ௰௧

ஓயாமற்சோறுகறியுண்டையாயடைக்கும்
வாயாநமசிவாயா, 55

குச்சிலியமாதர்குயமுங்குவலயத்தோர்
மெச்சுதமிழ்மாதர்வியன்முலையும்-சிச்சீ
தெலுங்கமடமாதர்சிங்காரக்கொங்கைக்
கலிங்கமெனவேசொற்-கவி. 56

இங்கிருக்கவென்றலெமனோட்டானிவ்விடம்விட்
டங்கிருக்கவென்றலயனோட்டான்-எங்குவைத்துப்
பேணுவேனிவ்வுடலைப்பித்தாபிறைசூடும்
தாணுவேசொக்கநாதா. 57

வெள்ளிதலைபொன்னின்மேவமகிழ்வீடாகி
பிள்ளைகளோபுத்திசொல்லும்பிள்ளைகளாய்-தெள்ளுமுகம்
வாடாவடிவுடையான்மனையாளானக்கால்
ஆடாரோவொற்றியப்பனார். 58

அடியார்க்கெளியன்சிற்றம்பலவன்கொற்றம்
குடியார்க்கெழுதியகைச்சீட்டுப்படியின்மிசைப்
பெற்றான்சாம்பானுக்குப்பேதமறத்தீட்சைசெய்து
முத்திகொடுக்கமுறை, 59

பரமரகசியத்தைப்பாழானவாயால்
இரவுபகலெந்நேரமின்றில்-குரனெறியக்
கூப்பிட்டுங்காணுமோகோலமிட்டநெஞ்சேமால்
பூப்பிட்டுங்காணுப்பொருள். 60

காந்தனுக்கென்றன்கொடியகாமவிகாரமெலாம்
போந்தறிவித்தாலுனக்குப்புண்ணியமாம்-சேர்ந்தோடும்
தேளிபடவாடுந்திரைக்கடலேமதன்கை
வாளிபடவாடு மனம் 91

கம்பனென் றுங்கும்பனென்றுங் காளியொட்டக்கூத்தனென்றும்
கும்பமுனியென் றும்பேர்கொள்வாரோ அம்புவியில்
மன்னுவளர்புதுவைசூழ்வாழ்குடந்தையாரியப்பன்
அந்நாளிலேயிருந்தாக்கால் 92

கட்டளைக்கலித்துறை.

பூமன்றிருக்கண்டியந்தகன்கோவல்புரமதிகை
மாமன்பறியல்சலந்தரன்விற்குடிமாவழுவூர்
காமன்கொறுக்கைநமன்கடவூரிந்தக்காசினிக்குள்
தேமனுகொன்றைச்சடையானையொருதிட்டசேவகமே. 93

கொச்சகம்.

மெய்ச்சரசமாக விளையாடும்வேளையிலே
கைச்சரண்மென்றதல்லாற் கைச்சரசமென்றேனோ
அச்சனகியார்மீதிலாசைகொண்டராவணனைத்
தச்சுருவவாளிதொட்ட தாமோதரேந்திரனே. 94

மீன்பார்த்துவிண்பார்த்து வேலையும்பார்த்தாள்வரவு
தான்பார்த்தெனைப்போற் சரிப்பார்க்கும்வெண்குருகே
மான்பார்த்துவாளிதொட்டமால்சிவநாராயணனை
நான்பார்த்துமாதர் நகைபார்த்திருந்தேனே. 95

முல்லைமுலையாய்த்தொடுத்து மோகமதனெய்யவந்த
வில்லைவில்லையாய்நறுக்கிமெல்லமெல்லத்தாராயோ
இல்லையில்லையென்றுசொல்லி யேற்கவரும்பாவலர்கள்
தொல்லைதவிர்க்குங்களந்தைச் சுப்பிரமணியபூபதியே 96

ஆயிரங்கண்ணுகமத னம்பமேலம்பிவிட
வீயிரங்குசெந்தேளி ருலிணங்கமானேனே
தாயிரங்கவேணடெண்க டாமிரங்கவாணிரங்க
பேயிருக்கும்வாயா விசயரகுநாயகனே. 97

கன்னலெனுஞ்சிறுகுருவிக் கனமழைக்காற்றுமல்
மின்னலெனும்புழுவெடுத்து விளக்கேற்றுங்கார்காலம்
மன்னவனுந்தென்மதுரை மாவலிவாணனைப்பிரிந்திங்
கென்னபிழைப்பென்னவிருப் பென்னநகைப்பின்னமுமே. 98

ஆகசெய்யுள்-908.

—∞∞—

விருத்தம்.

கைத்தலத்தழற்கணிச் சிவைத்திடப்புறத்தொருத்தி
கட்கடைப்படைக்கிளைத்த திறலோராம்
முத்தலைப்படைக்கரத்தெமத்தாசிற்சபைக்குணிற்கு
முக்கணக்கருக்கொருத்தர்மொழியாரோ
நித்திலத்தினைப்பதித்தசச்சறுத்தடிக்கனத்து
நிற்குமப்புதத்தினத்தினிடையேவேள்
அத்தரத்தினைத்தொடுத்துவிட்டுநெட்டயிற்கணத்த
லக்கணுற்றிடச்செய்விக்குமதுதானே. 1

கரும்பாலேபணையடித்துப்பனிநீர்தேக்கிக்
கதலிபலாக்கனியதனால்வரம்புகட்டும்
திருப்பாலைவாழீசர்பவனியாடுந்
தெருவிற்பால்விலைபகர்சிற்றிடைச்சியாரே
அருட்பாலோபொருட்பாலோகாமப்பாலோ
ஆழிதனைக்கடைந்தெடுத்தவமுதப்பாலோ
இருப்பாலேமனம்படைத்தீர்நில்லீர்சொல்லீர்
எந்தப்பால்விற்கவந்தீரியம்புவீரே. 2

பூப்பார்த்துப்புகழ்ப்பார்த்துப்பொருள்பார்த்துக்
கவிதைசொல்லும்புலவோர்தங்கள்
நாப்பார்த்துக்கொடைகொடுக்குநல்லதம்பி
தந்தசொக்கநாதாவென்றாய்
காப்பாற்றமுடியாதுகையிலொருகாசுமில்லை
கடனென்றாலும்
பாப்பாத்திசோரிடுவாளிருந்தாலுமுறங்கமதப்
பயலொட்டேனே. 3

கெட்டசாறுதவிடுகஞ்சிகிருமியுண்டபாவறைக்
கீரைவேர்தெளிந்தமோர்முறிந்தபாகுகிண்டிமா

இட்டசோறுகொழியனுப்பிடாதபுற்கையாயினும்
எங்குமன்பதாகநுங்கவின்பமாயிருக்குமே
பட்டபாகுபசுவினெய்பருப்புமுக்கனிக்குழாய்
பாளிதங்கடாளிதங்கள்பண்ணியாரவகையுடன்
அட்டபாற்குழம்புகன்னலமுதமோடமுதவினும்
அன்பிலாரளித்திடாதவசனமென்னவசனமே. 4

துங்கவடகயிலாயமுதலாமைந்து
துளுவொன்றுதொண்டைவளநாட்டெண்ணான்கு
தங்குநடுநாட்டிருபத்திரண்டுபொன்னித்
தலநூற்றுத்தொண்ணூறுமலைவாட்டொன்று
கொங்கேழுசிங்களத்திலிரண்டுவையைக்
குளிர்ந்தமிழ்நாட்டீரேழுமேலாஞ்சூலச்
செங்கையார்தலமிருநூற்றெழுபானான்கில்
தென்பாகங்கயிலாயந்திருக்குற்றாலம். 5

ஓதுமைந்திலொன்றிலைந்திலொன்றுமன்னவன்பிதா
ஊர்திதொட்டவேருன்மீதிலுற்றசாபநிருபனார்
தாதுகொண்டகாவிமாலைசூடித்ப்பிதம்பிசேய்
தனகுடைப்பினைவன்மற்றலைக்கிரீடதுவாசனார்
காதணன்பன்றந்தைபாகன்பின்வன்பகைச்சுமைக்
கலையெடுத்தகையரையர்க்கதிபெறத்தவஞ்செய்தோன்
தீதிருதைகொண்டுவந்தசிலைவதிந்தபதியினான்
சிரமரிந்தவன்கொள்பாரிசேரிலாறுறைந்ததே. 6

ஓதும் ஐந்துபஞ்சபூதம் அதிலொன்று நிலம் அதில் ஐந்து ஐந்துதிணை அதில் ஒன்று குறிஞ்சி அதற்குமன்னன் முருகன் அதன்மீதிலுற்றசாபம் தனுசு அதையுடைநிருபன் இராமன் அவன்தம்பி பணைமாலைசூடிய பலராமன் அவன்தம்பிகிருஷ்ணன் அவன்சேய் மன்மதன் அவன்குடைதிங்கள் அதற்குப்பின்னவன் சனி அவன்கிரீடம் அதைக்கொடியாகவுடையவன் துரியோதனன் அவன்நண்பன் கர்ண்ணன் அவன்தந்தை சூரியன் அவன்பாகன் அருணன் அவன்பின்னவன் கருடன் அவன்பகை ஆதிசேடன் அவன் சுமை பூமி அவன்கலைகடல் அதையெடுத்தகையர் அகஸ்தியர் அவரையர் பிரமதேவர் அவர்கதிபெற்றத் தவஞ்செய்தோன் அநுமான் அவன்றந்தை வாயுஅவன்கொண்டுவந்தசிலை மேருசிகரங்கள் அவைகளைப்பதியாகவுடையவன் இராவணன் அவன்சிறமறிந்தவன் திருமால் அவன்கொள்பாரி

இலக்குமி அவள்சேர்யில் தாமரைப்பூ ஆலுறைந்து ஆலமரத்தின்கீ
ழிருந்தது (இஃது பொருண்மேற்பிரிந்ததலைவன் ஆலின்கீழ்வைத்த
அலர்க்குறியைக்கண்டு பாங்கி தலைவிக்குணர்த்தியது.)

தொடுத்தமுத்தமிழுக்ககத்தியனெனவே தோன்றியபுவனச்சே
ரையர்கோன், சொலக்கணப்புலவனிலக்கணக்கவியைத் துதித்தகங்
களித்திடுங்களியேம், வடத்தினிற்புகுந்துமதுத்திறந்தவனுர் வடித்த
கட்குடித்துநின்றவனுர், வறுத்தகட்குடித்துக் குதட்டுகின்றவனுர்ம
யக்கியுட்டியக்கமுற்றவனுர், கடுக்கினைமிடற்றிலொடுக்கியிட்டவனே
கையிலேசிலம்பையிட்டவனே, கனத்தநூற்கொடியைநாலிட்டவனே
கண்ணிலேகுழையையிட்டவனே, முடுக்கியவயிற்றிலாழியிட்டவனே
முகத்திருபதக்கமிட்டவனே, முளைத்ததோரொருபான் சதங்கையி
ட்டவனேமுழுப்பட்டவர்க்கலாதிலையே. 7

கடுவிஷம் சிலம்பு மலை நூற்கொடி வாணிகண்குழை கட்செவி
ஆழி கடல் இருபதக்கம் இருபதுகண் ஒருபான்சதங்கை ஆயிரங்கை

தேமதுரகவிவிரகன்றெவ்வைவருபெருமான்
செல்வச்சங்கரர்தாளைத்தினம்வணங்குகளியேம்
யாமதுவுண்டாலுமதுமக்கடிமைவாபோல்
எமைமயக்குமோமயக்காதினியியம்பக்கேளீர்

வீமன்மகயத்தியனேகுபேரன்மகன்புதனே
வீருணைமுகனொருவன்விரும்புமகன்குகனே
காமன்மகன்சயந்தன்வேதன்மகன்சிவனே
காலன்பாற்பிறந்தமகன்கடந்துளானே. 8

வீமன் பிரமன் குபேரன் சந்திரன் விராணைமுகன் விருன் ஐம்முக
ன் காமன் இந்திரன் வே மூங்கில் கால் காற்று.

சந்தப்பாவிருத்தப்பாகலிப்பாவெண்பா
தாழிசப்பாகொச்சகப்பாத்தனிப்பாவக்கும்
விந்தையப்பாவாகியகிரந்தப்பாவும்
வெல்லப்பாவதுபோலவிகடப்பாவும்

எந்தப்பாவுரைத்திடினுமொருபேறில்லா
ஏதப்பாவிக்குமின் திணைப்பாதத்தைக்
கந்தப்பாமுருகப்பாபோரிவாழ்வே
கையப்பாமெய்யப்பாகாட்டப்பாவே. 9

ஆதிசிவன்செத்தானோவுமைசெத்தாளோ
ஐங்கரனுஞ்செத்தானோவரிசெத்தானோ
வேதியனுஞ்செத்தானோநீசெத்தாயோ
வெட்டவெளியானந்தம்வெறும்பாழாச்சோ

நாதியற்றுப்போறாயோவழிகாட்டாயோ
நாயேனுக்கிரங்கிவந்துநலந்தாராயோ
பாதிவழிதனிலவதிப்படுத்துவாயோ
பாதகாதிருச்செந்தூர்பதியுள்ளானே 10

நீருஞ்சுமந்தேன்விறகெடுத்தேளித்தஞ்சுமந்தேன்சாணங்கம்
நிகழவடிபட்டுதைப்பட்டேநின்றேன்வையைக்காளாக
ஆரும்விரும்பார்த்துகிலுடுத்தேனழகுமேனிகரிக்கோலம்
ஆனேனதனாலல்லோவுன்னடியாளுனக்குச்சரியானேன்

காரும்விரும்புங்கடுவணிந்தனேகருணைப்பெருங்கடலே
கமலத்தயன்மால்காணாததாலகாலாவென்றுயரந்
தீரும்படிதண்ணருள்புரிவாய்சிவனேயமரர்க்கொருவிருந்தே
தேவேதெய்வமறைப்பொருளேதிகழுங்கடவூர்ச்சேவகனே. 11

காளமேகப்புலவர்பாடியது.

ஏறிகட்டியகொட்டிலரங்கமே யீரிரண்டுமுகன்வாயிலாய, மாறுகண்ணப்பணவாய்மடைப்பள்ளியே வாய்த்தவோடைதிருவாலவதனமே, நூறுசோதித்தொண்டனில்லாளுந்தி வேட்டநற்கறிகாய்க்கின்றதோட்டமே, நாறுபூம்பொழில் சூழ்தில்லையம்பல நாரிபாகற்கு நாடகசாலையே.

நடுவெழுத்தலங்காரம்.

திருமால்வாகனநாவாயிராசியொன்று
சினைதெவிட்டார்மாதுலன்கோகிலமிவ்வேழின்
உருவாமோரெழுத்தினடுவெனக்குச்செய்தான்
உகந்துபதினான்கணையுந்தானேகொண்டான்

ஒருபாசத்திருத்தினான்கையிலேற்றான்
ஒருமதனுதனைக்கிளித்தானுண்டான்பூண்டான்
பரிவாயொண்கரத்தமைத்தானுகந்தானிந்தப்
பைம்பொழிற்றில்லையுளாடும்பரமன்றானே. 13

திருமால் வாகனம் நாகாரி நாவாய் சலகம் இராசி கன்னி சினைகவடு தெட்டார் ஆரார் மாதுலன் மாமன் கோகிலம் பல்லி இவற்றி

ன்- நடுவெழுத்துகள்கால்ன்வராமல்இவற்றினெனையவெழுத்துகளின் பயன். நாரி- உமை; (கம-கபாலம்) (கனி-பழம்)கடு-விஷம்) ஆர் ஆத்தி) மான்)எலிமிச்சை)

கூற்றுவனைவின்மதனையரக்கர்கோவைக்
கூனிலவைக்குஞ்சரத்தையிஞ்சிமூன்றை
ஏற்றுலகின்புறவுருவமாளத்தோள்க
ளிறவெறிப்பவிமையப்பெண்வெருவலேவக்

காற்றெருருமாலெனயனத்தால்விறலாற்கற்றைக்
கதிர்முடியாற்காதலத்தாற்கணையாற்பின்னும்
ஊற்றழியவுதைத்தெரித்துநெரித்துச்சூடி
உரித்தெரித்தானவனென்னையுடையகோவே

பொன்னைவலரக்கனைநாற்றுவரைக்காவைப்
பொருசிலையைக்கணைகடலைப்பொன்னைநீன்ற
நன்மதற்காய்ச்சுரர்க்காயைவருக்காய்காதல்
நட்பினுக்காய்ச்சானகிக்காய்நடைவைக்காக

மன்னுசுருல்வடிக்கணையால்வலையாற்புள்ளால்
வயங்குதோள்வலியால்வானரங்களாலும்
உன்னுடற்சிறிச்சிறங்கொண்டமரில்வீழ்த்தி
முதலோடுங்கொண்டிருந்தடைத்தமேகூரானே,

இந்துமுடிக்குஞ்சடையாளரிக்குந்தொண்டைவளநாட்டிற்
சிந்துபடிக்ககவிபடிக்கத்தெரியாமடவாயுன்றனுக்குக்
கெந்தப்பொடியென்பூமுடியேன்கிழவாய்நரைத்துமுகத்திரைந்தும்
இந்தமுறுக்கேன்வீருப்பேனெடுப்பேனின்னைக்கெடுப்பேனே

ஏழானையடித்தபுலிதனையடித்தான்வீரசெனனென்றேகாட்டில்
வாழாமற்சிறுபுலிகளீப்புலியொடெலிப்புலியாய்வடிவங்கொண்டு
பாழாக்கிக்காடெல்லாம்பரதவிக்கவடுகரடுப்படியில்வந்து
கூழாகிவயிற்றினிற்போம்பொழுதுகுணம்போகாமற்குமுறுந்தானே

கட்டளைக்கலித்துறை.

காவென்றுஞ்சிந்தாமணியென்றுசொல்லியென்கையிலள்ளித்
தகாவென்றுகேட்கத்தரித்திரம்பின்னுன்றுதள்ளியென்னைப்
போவென்றுரைக்கவுநாணலங்கேயென்னபோவதிங்கு
வாவென்றிழிக்கவும்வந்தேன்விராலிமலைக்கந்தனே

கொச்சகம்

காவென்றுபேர்படைத்ததாயககணத்துரும்போது
நீரென்றுபேர்படைத்தாநெடுந்துரையில்வந்தற்பின்

வாரென்றுமென்முலையாராச்சியர்கைவந்ததற்பின்
மோரொன்றுபோர்புடைத்தாய்முப்பேரும்பெற்றாயே

முன்னாளீரளக்குமுடிமன்னர்க்காத்திருக்குமுனிகளென்னை, மன்னு மலோட்டுவிக்குமாதரைச்சொற்கேட்பிக்குமடக்குமாட்டை, பன்னு கத்தலைதருக்கும்பாரைச்சொற்மேட்டிவிக்குப்படிப்புண்டாக்கும்,என்னுனுங்கிழவருக்கோரிடும்பாக்குநடைகொக்குமென்னைகோலோ

கருந்தலைசெந்தலைதங்கான்றிறக்காய்கடையிற்சுற்றி
வருந்திக்குடலைக்குந்தாட்டிக்கும்கொத்திடுமாவதல்லால்
கரந்தைகளாண்டிலொருக்கால்வநவதுகண்டிருந்தும்
அரும்புக்குங்கொத்துக்கும்வந்தார்பிழைப்பதரிதென்பரே.

சங்கையிலாமதன்விடுத்தபகழிதைத்த புண்வருத்தந்தன்னை நோக்கிக், கொங்கையையொத்திடங்கொடுத்துக் குங்குமச்சாந்தப் பற்றுங்குளிரப்பூசிச், செங்கனிவாயிதழ்மருந்து முள்ளுக்கேகொடுத்தெனக்குச்செய்தநன்றி, மங்கையரேயிந்திரவி தெர்க்குவடக்குதித்திடினுமறந்திடேனே.

ஏமிராவோரியென்பாளெங்குண்டிவஸ்தியென்பால்
தாமிராச்சொன்னதெல்லாந்தலைகடைதெரிந்ததில்லை
போமிராச்சூழுஞ்சோலைபொருங்கொண்டைதிம்மிகையில்
நாமிராப்பட்டபாடுநமன்கையிற்பாடுதானே

சுந்தரகவிராயர்-விருத்தம்

ஒருகோட்டுக்கலைமுனியுமொர்ளிதிகழும்புலியாடையுடுத்தகோவும்
மருமலர்வாழ்திசைமுகனும்வானவர்களுபகனுமயிடன்றானும்
க்ரியசிறத்திருமாலும்வாலியும்பராசனுமேகாமநம்பால்
பெருமையிழந்தனரென்றார்சிறுமனிதர்க்கெப்படியோபேசுங்காலே

வாசவனும்பிரர்நகைக்கவுடலானொருவனாவடிவமானான்
தேசுபுகழ்கலைமதியுமுடலிழந்தான்மலர்வேதன்சிரமொன்றற்றான்
ஈசனுநல்விழிதிரந்தானிராவணசுந்தோபசுந்தரிறந்தார்மண்மேல்
காசினிப்புன்மானிடரோமோகசாகரமதனைக்கடக்கவல்லார்

வணங்கியொருகாண்முடமாதியெருகண்ணின்றிச்செவியிழந்து
வணங்குநெடுவாலுறப்புண்டுமென்றுமுதுகில்வ்யிறெட்டி
அணங்குநலியமெலிவெய்தியகல்வாயோடுகழுத்தேந்திச்
சுணங்கன்முடுவல்பின்சென்றால்யாரைக்காமென்றுயர்செய்யான்,

கட்டிறலைதிருப்பிவைத்தாற் றலைவலிபோமோவந்தக்கதைபோ ளாட்டுக், குட்டியிதென்னடிச்சியே செட்டிவயித்தியன் பள்ளிக்கொ

ண்டான்பாம்பின், பெட்டி யினுங்கையிடு வனுண்டையும் பாய்ச்சிடு வனன்றாய்ப்பிலமாய்சாயங், கட்டுவனிஃ தல்லாதாறுதேமதன் விடும் பகழிப்புண்டானே,

மரமதுமரத்திலேறிமரமதைத்தோளில்வைத்து
மரமதுமரத்தைக்கண்டுமரத்தினான்மரத்தைக்குத்தி
மரமதுவழியேசென்றுவன்மனைக்கேகும்போது
மரமதுகண்டபாதர்மரமுடன்மரமெடுத்தார். 28

இராமசாமிக்கவிராயர்பாடியது.

மாலைதனைப் புனைந்தாலு மலரணையிற்படுத்தாலு மருவாபன்னீர், ஏலமுறத்தெளித்தாலு மெவ்வளவேனுங் குளிரவிலை யென்செய்வேன், கோலமுறுமணலியிலே கிளைகளோடு நகம்படைத்துக்குலாவுமெங்கள், சோலைதனைச்சேராமற்காமவிடாய்தணியாதே தோகைமாரே.

பாலைநிகர்மொழிமாதே யென்னிடத்தில்பூரணமாய் பட்சம்வைத்துச், காலமுகிலனைய கரன் மணலியில்வாழ் சோலையெனுங் கன்னன்பாற்போய், மாலைகேண்மறுத்தாலென்மனத்தைக் கேண்மறுக்கின்மதன்வாராவண்ணம், ஓலைகேண் மறுத்தக்காற் கிள்ளாக்குக் கேள்வேறென்றோதிடாயே,

அரக்கனலையிலங்கையை வென்றோன் மருகன்றனி கேசனன்பர்பானஞ், கிரக்கனலை யாம்லுனைக் காப்பனென்றனையடிதே மொழியேமாலை, வரக்கனலைமதிவீசப்படுபோவல் வேளைதனில்வாதுக்கேம், துரக்கனலைமதப்பயலேன் முனங்குனிக்கத்தகுமோசொற்றுகைநீயே.

என்னையவரறமறந்தாம்யானவரைமிகநினைந்திங்கிருந்துவாட
முன்னைவிதிப்படிதானோ முற்பிறப்பிற்செய்தவினைமுடிந்தவாறோ
கன்னனெங்கள்பிராமன்வரதுங்கராசமணியற்காசிநாட்டில்
அன்னவயற்குருகினங்கா டனித்திருக்கமுடியாதென் றறைகுவீரே.

தன்மனையிரதமாகித் தன்மகன்வலவனாக்கித்
தன்மகன்பேரனோடு தனகுமைத்துனன்காலாக்கித்
தன்னைநாரியாக்கித் தானுமோரம்புமானான்
தன்மனமிடங்கொண்டுய்த்தசங்கரன்றனக்குமாயன்

முன்னொருவூரின்பேராமுதலெழுத்தில்லாவிட்டால்
நன்னகர்மன்னர்பேராநடுவெழுத்தில்லாவிட்டால்
கன்னமாமிருகத்தின்பேர் கடையெழுத்தில்லாவிட்டால்
உன்னிடதேனின்பேரா மூரின்பேர்விளம்புவீரே. 42

மதுரை-துரை-மரை-மது.

மதுரைமுத்துக்குமரதொண்டன் றமிழ் போலக்கவிமதுரம் பொழியப்பாடும், சதுரருண்டோவெனவிரிஞ்சன்வினவினால்சேடனான்றானென்றானோர், பரமெனினுந்தோன்றுமன் மால்கொண்டுதடல்வீழ்ந்தான்பதுமன்சீறி, மதமுறுநாவைப் பிளந்து காதறுத்து மண்சுமக்கவைத்திட்டானே. 35

மதுகரித்தையிகழ்ந்துகுயில்வடிவேலர்தமையழைத்துவாராமென்றே, இதைமுறைத்துச் சென்றதென்ன விண்ணமுங்காணேனதனுக்கிரக்கமேது, சதமிதெனவளர்த்தெடுத்ததாய்க்குதவாதார்க்குதவுதத்தையேநீ, முதுமறைசேர்க்குமரர்தமை யழைத்துவாமதப்பயலைமுடுக்கத்தானே. 36

குருமூர்த்தமாய்வந்து வினையொழித்து முத்திதனைக் கொடுக்கத்தியாகர், ஒருமூர்த்தியல்லாமன் மன்றுமொருமூர்த்திகளுமுண்டோநெஞ்சே திரிமூர்த்தியென்பார்கள் வரவர்வாகனமேறிச்சேனிற்சும்மாய், திரிமூர்த்தியல்லாமலொருமூர்த்தியுங்கதியிற் சேர்த்திடாரே 75

இருக்கோல் மிடுங்கலையைத்தெய்வசிகாமணி முகில்வந்திணங்கா நாளில், உருக்கோலவடிவானன்மைந்தனு மைத்துனனுநிதமோய்விலாமல், மருக்கோலஞ்செய்வதினும் வடவலைச்சொரிவதினு மயக்கமுற்றுத், திருக்கோலங்கொண்டமகடயங்குகின்றான்மயங்குகின்றான் தினமுந்தானே. 38

முந்தனத்தை தூதுவிட்டேன் வரவுமில்லைமதராஜன் முனிந்தே வில்லால், எந்தனக்கிலக்காக மலர்வாளி யென்கிறானினியென்செய்தேன், கந்தனத்தையகலாத பூம்பாவை வேலப்பன்கையாற்பூசுஞ் சந்தனத்தைசவ்வாதை நினைந்துமனதுருகுதடிதையலாளே. 39

வெறிவிலக்கல்

குருத்துக்கதலிபசுந்தேனையள்ளிக்குரங்குரட்டிக்
கருத்திக்களிக்குங்குருங்குடிவாழ்தருமண்ணல்வெற்பில்
பருத்திப்பொதிக்கிட்டதீப்போலக்காமம்படைத்தவிந்த
ஒருத்திக்கொருவன்பகையோநடுச்சொல்லுமூரவரே. 40

தொட்டிக்கலைசுப்பிரமணியதம்பிரான்வெண்பா.

வல்லவகுலத்திருக்குமன்னவாவாசமலி
நல்லவகுலத்திருக்குநாதனே - மெல்ல
வடிவாளைக்கொண்டமணவாளாகணிச்சி
வடிவாளைக்கொண்டென்னிடர்மாற்று

(குளத்திருக்குநெற்றிக்கண்)

கட்டளைக்கலித்துறை.

பொன்முகநோக்கிநின்றன் முகநோக்குமுன்போயினளென்
றன்னிடவீழ்ந்தனள்கை தொடவுய்ந்தனளுன்னுடனே
பின்னும்புணர்ந்திட முன்னறிவற்றிடபெற்றபிற்ப
பொன்னலமென்றனளேரகத்தான்மனையீரங்கொடியே. 42

ஒட்டக்கூத்தர்

சற்கோலிப்பாசப்பூதற்கேதட்டாமற்சாகைக்கேகிற்பீர்
முற்கோலிக்கோலிப்பூசித்தேமுட்டாமற்சேவித்தேகிற்பீர்
வற்றோநெட்டைப்பாரச்சேனைமைப்பூகத்தேறித்தாவிப்போய்
நெற்றாளூற்றாலைப்பாகிற்சேர்நெய்யத்தானத்தானைத்யானித்தே. 43

புகழேந்தி

விக்காவுக்காலித்தாப்போய்விட்டானட்டார்கட்டோர்புக்கார்
இக்காயத்தாசைப்பாடுற்றேயிற்றேடிப்போவைப்பீர்நிற்பீர்
அக்காடப்பேய்தொக்காடச்சூழப்பாடத்தீவெப்பாடப்பூண்
டெக்காடக்கானத்தாடப்போநெய்த்தானத்தானைத்யானித்தே. 44

ஆக-செய்யுள்-952.

இ ப் ப தி ப் பி ல் நூ த ன மா க ச் சே ர் த் த

பலவித்துவான்கள்பாடியபாடல்.

கலித்துறை,

நீத்தாவறிஞர்பிணியாளர்கல்விநெறியறியார்
பூத்தாரமஞ்சிவிருந்தொளிப்பார்பொருட்கேசிவிகை
யூர்ந்தேசுமைசுமந்துண்போரிவர்களுயிரிருந்து
வீந்தாரிவரைவர்காண்செழியாதிருவேங்கடமே. 1

கொடுத்தாவிகாக்கின்றகாவேரிவெற்றிக்குறைந்திடினு
மடுத்தோண்டிநீருண்ணுவாராதுபோலிந்தமாநிலத்தி
லடுத்தாரைரட்சிக்குந்தாவென்பார்க்கடையாளம்பிச்சை
யெடுத்தாகினுங்கொடுப்பாவெள்ளைநாவலிருப்புவனே. 2

வெண்பா.

மாமிக்கோர்மாமியுண்டுவாணருக்கோர்வாணருண்டு
சாமிக்குமேற்றகப்பன்சாமியுண்டு-பூமிக்குள்
ளெல்லாந்தெரிந்தவருமில்லைதெரியாதவரு
மில்லாமற்கண்டவர்களார். 3

ஆங்கால்மெய்வருத்தவேண்டாமதுவன்றித்
தேங்காய்க்கிளநீர்போற்சேருமே-போங்காலை

காட்டானைதின்றகனியதுபோலாகுமே
தேட்டாளன்றேடுந்தனம், 4

சொல்லிச்செய்யார்பெரியோர்சொல்லிச்செய்வார்சிறியோர்
சொல்லியுஞ்செய்யாதவர்கசடர்-சொல்லுங்கால்
குலமாலைவேற்கட்குறிப்பறிந்துபார்க்கிற்
பலமாநற்பாதிரியைப்பார். 5

கலித்துறை

முற்றுத்தில்லையும்வாசமுமுள்ளதுமுனையுமெவர்
சற்றாகிலுஞ்செய்துவைத்ததுண்டோவண்புஞ்சர்க்குணமும்
பெற்றார்புறவிக்குணங்கானதுகண்டுபேதையர்கள்
கற்றால்வாராதுகண்டாய்கச்சிமாநகர்காவலனே. 6

வெண்பா

மிக்குப்பெருகியுமிகுனல்பாய்ந்தாலும்
உப்பொழிதல்செல்லாவொளிகடல்பால்-மிக்க
இனநலநன்குடையராயினுமென்று
மனநலமாகவாங்கீழ். 7

உடைப்பொருஞ்செல்வத்துயர்ந்தபெருமை
அடக்கமுநெஞ்சத்தினுடு-நடக்கையின்
ஒள்ளியனல்லான்மேல்வைத்தல்குரங்கின்கைக்
கொள்ளிகொடுத்துவிடல். 8

சத்துவம்புத்திவித்தைச்சதுர்விதார்த்தங்களான
இத்தனைவிதமுஞ்செல்வமில்லையேயில்லையாகும்
சத்துவம்புத்திவித்தைச்சதுர்விததார்த்தங்களான
இத்தனைவிதமுஞ்செல்வமெய்திடிலெய்துமென்றே. 9

கதிரவனிலையேற்கண்ணிற்காண்பனமறையுமாபோல்
நிதியமொன்றிலையேலியார்க்குநீதிமான்ஞானபோதம்
துதிபெருகீர்த்தியாண்மைசூழ்ச்சிமந்திரவிசாரம்
கதிர்பிமானமெல்லாந்தன்னிலேமறைந்துபோமால், 10

கலித்துறை,

பாலுக்குச்சக்கரையில்லையென்பார்க்கும்பருக்கையுற்ற
கூழுக்குப்போடவுப்பில்லையென்பார்க்குங்குத்தித்தைத்த
காலுக்குத்தோற்செருப்பில்லையென்பார்க்குங்கனகதண்டு
மேலுக்குப்பஞ்சணையில்லையென்பார்க்கும்விசனமொன்றே. 11

மேவுமென்போகங்களிம்பில்பெண்ணுடைவியன்கலன்பாற்
றுவியம்போசனம்தாம்பூலம்வீசுகந்தமன்பி
னுவெழிற்பாட்டலர்மெல்லணையாமிவைநண்கமைந்த
வாவிக்கடவுளருட்பாழிபெற்றவரசிடமே.

வெண்பா.

எண்கோவைமேகலைக்காஞ்சியிருகோவை
கன்கோல்கலாபமிருபத்தொன்று-பண்கோள்
பருமம்பதின்மூன்று முப்பபத்திரண்டு
விரிசிகையென்றுணரப்பாற்று. 13

மன்னவன்றணங்கொடி கெனவருத்தலுமதற்குத்
துன்னுபைங்கொடியடுத்த கொம்பதனையேசூழும்
கன்னிமாதருமன்னருந்தங்களைக்காத்தே
பன்னுமிங்கிதஞ்செயுமவர்பாற்செய்வார்பரிவு 14

பாவிகளகத்தைப்போலும்பலவிரதியர்கள்போலும்
ஒவருசகாயர்போலுமுறைமுறைசுற்றம்போலும்
மேவுவரவரைச்சேரின் மேன்மையரேனுமுய்யார்
பூவையுமுயலுமுன்னோர்ப் பூனையைச்சேர்ந்தவாறே. 15

வேந்தருங்கொடுந்தீயும்வெவ்விடம்பொழிபகுவாய்
பாந்தளுஞ்சரியாதலினன்னவன்பக்கல்
போந்துநண்புகொண்டடவி நீபுறக்குமாறென்னும்
மோந்திடும்படிக்கடிப்பதுமன்னர்தம்முறையே. 16

ஒருவருக்கமுதளித்தானுண்பனேனுலகமாளு
மிருவருக்கமுதளித்தா லிந்திரன்பதவிசேர்வார்
மருவியபூசைசெய்து யந்தவரிளப்பையாற்றில்
திரும்டவன்னதானஞ் சிவாலயமாகுந்தானே. 17

வெண்பா.

அருக்கனையுஞ்சோமனையு மைம்மூன்றுநாளதனிற்
பெருக்கவரவந்தீண்டிற்பேசுங்கால்-செருக்களத்தின்
மன்னர்மடிவார் மடிவாரேயாமாகில்
அன்னமரிதாய் விடும். 18

பருதியும்பஞ்சமாகிற் பார்மதிவெள்ளமாகுங்
குரிதியுங்கூச்சலாகும் கொடும்புதன்காற்றதாகும்
பெருத்ததோர்வியாழம்வெள்ளிப்போகமேரவிற்குங்
கருத்ததோர்சனியுமாகிற் கலகமும்பற்றுதே. 19

வெண்பா.

கல்லாடர்செய்பனுவல் கல்லாடம்நூறுநூல்
வல்லார்சங்கத்தில் வந்தருளிச்-சொல்லாட
மர்மதுரையீசர்மனமுவந்துகேட்டுமுடித்
தாமசத்தார்நூறு தரம், 20

இடுகொட்டுமங்கை யெனும்பிற்புராண்மால்
சுடுகாட்டிலாடுவார் சுட்டிடுகொட்டுஞ்
சம்பந்தாயென்புநின்பாறந்தாக்கிக்கொண்டிலனே
ஞம்பந்தானென்னுமழைக் கொம்பு. 21

கலித்துறை.

அரியெச்சில்போலவாயெச்சிலுமஞ்சரியெச்சிலும்
எரியெச்சிலேழுமுனியெச்சிலும்போர்வேந்திழையாள்
கரியெச்சில்போன்றனளவிக்கிரமச்சோழன்கலைத்தகன்றின்
புரியெச்சிலுண்டவியல்வண்ணனெச்சிற்புரந்தரனே. 22

வாக்குமனமுடையானொஞ்சுனார்தமணிமுடிமீ
தாக்குந்திறமையிருங்கோளன்வெற்பிறயனடுக்கம்
போக்கும்புனிதனுங்கந்தனுமாலும்புரந்தரனும்
நாக்குங்கழுத்துந்தலையுமில்லான்பகைநானல்லவே, 23

காயுங்கடுஞ்சுரமீதமென்றுகாட்டியவதையுஞ்சொன்ன
வாயும்பகைபெழும்பாலையிலேமணிமாமகுடம்
தோயும்புகழ்சசிச்சுந்தரபாண்டியன்தோகைவெற்பில்
தாயுந்தமருமில்லாளிங்ஙனேன்னின்றதார்குழலே. 24

ஆக செய்யுள்-976.

கடிகைமுத்துப் புலவர்பாடிய

மடக்கு.

கருப்பஞ்சிலையுமோர்கரமே-கண்டேநானுஞ்சுகரமே
காமப்பயனுமூர்க்கரமே-கணையைத்தொடுப்பான்சீக்கிரமே
வருத்தம்புரிவாரனேகரமே-வல்லார்மடவார்நிசகரமே
மாமால்வெங்கடேசரெட்டன்-வருவான்வருவானென்றிருந்தே

...ருத்துப்படிக்குமனோகரமேசெய்தானினித்திவாகரமே
தினியில்வருவாயெனக்கரமேதெரியவுதித்தான்சக்கரமே
...பொருத்தந்தருகண்ணகரமேபோர்வெட்சிலைவீராகரமே
பூவைமருஞ்சேகரமேபுகழ்ந்தேன்ரத்திநகரமே 1

...சையான்முகத்தைத்துமலர்க்கண்ணுலெனையும்பார்த்துமலர்
காலால்வண்டுகுடைந்தமலர்க்கனியையெனதுகுழற்கணிந்து
...யெய்யானைதயேதடவியென்றன்மேலேயிலங்குமுடைமையெல்லா
வெவ்வேருகக்களைந்ததனைமீட்டுநிறையாத்தரித்துமங்கே
...கையாவிடையத்துகிலாநன்றாய்ப்பொதித்துமனம்விரும்பி
நகைத்தான்வெங்கடேசுரெட்டன்நானுமகிழ்தவனைப்பார்த்தேன்
...கையார்விழியாதமைக்கலவிவகையாலுருக்கிவசப்படுத்தும்
மார்க்கமவனுக்கல்லாமல்மாரன்றனக்கும்வாராதே. 2

தலைவனைச்சேர்ந்தவகைக்குங் கடலுக்குஞ்சிலேடை

...டிமேலேந்திமலர்வாய்த்தேன்வழங்கித்தனம்பார்த்துகிரும்
வைக்கத்தனமேகசங்குமென்றுவணிவாய்முத்தம்பலகொடுக்கக்
காடியினிடைகால்விசைத்தெழிப்பிக்கொள்கப்பலைப்பாயசைக்கவ
ந்து,கூடவரைச்சோமனுந்தோயக்கொட்டுமெயிர்தம் கொப்புளிக்க
...டியையளந்தகாலாற்கற்பாறைமிதித்துமடமாதைப்
பார்த்துமுனியேதிதுவெனவேபகர்ந்தோன் வெங்கடேசுரெட்டி
...டியுழுனையும்படைத்தவெற்றித் துரையைச்சேர்ந்தவிதம்போலத்
தோற்றுங்கடலோநானுனக்குச்சொல்லிக்காட்டவேண்டாமே, 3

...ப்புறத்தொதுக்கடிக்கும்அத்தொழிற்கொருப்படுத்தி
அக்கணத்திற்றுடைக்குள்அப்படுத்தெழுப்பி
...ப்புறத்திழுத்தொருத்திஎப்படிச்சமத்திகெட்டி
இத்தனைக்குழுத்தரித்ததிப்படிக்ககனப்படப்பை
...ப்புறக்கிடத்தும்வித்தைதகுற்றமற்றவித்தைதகுத்து
குத்தென்சொலச்சொலிக்கொடுத்துரைத்தடுத்தடுத்து
...மய்யபுறத்தொழிற்பயிற்குவெங்கடேசுரெட்டன்
விடியுமட்டுமனுபவித்தவித்தைநல்லவித்தையே. 4

...நகரத்தில்விடவிலைப்பின்உபரிவித்தைமுதனடத்தி
...டிர்செலுத்துங்கிரிகரத்தில்உரகனுக்கிமணியசைத்து
...நியப்புமமுதுடைத்துவரவெழுப்பியதிலெனக்கு
...னுமட்சம்வரவரித்தமலரணைக்குள்விழவுயர்த்தும்

இருதொடைக்குளவனிருக்களனைமலர்த்திமுலைசுவத்தும்
இதழ்சுவைத்துமொருதரத்தில்இருவருக்குமனம்ருசிக்க
விருதுகட்டியனுபவித்தவெங்கடேசுரெட்டமன்
விரகதாபமதுதணித்தவேளைநல்லவேளையே. 5

தந்திதங்கலந்துகண்டதத்தரங்கமென்றுசந்த
தந்திடம்புரிந்தணைந்ததந்திரந்தெரிந்திசைந்து
பந்தெழும்புகின்றதென்றுபந்திகொண்டெழும்பவுஞ்சு
பந்தெருஞ்சுகம்பொருந்துபந்தயங்களும்பகர்ந்து
வந்துவந்திருந்தகொங்கைமந்தரங்குலுங்கவண்டு
மண்டுகொண்டைகொண்டலென்றுவந்தொதுங்குசண்டைகண்டு
விந்தைவிந்தையென்றியம்பிவெங்கடேசுரெட்டமன்
விரகதாபமதுதணித்தவேளைநல்லவேளையே. 6

மடியில்வைத்துமுலைபிடித்துவலியமுத்தமிடமுகத்தில்
வதனம்வைத்துமகனவித்தைவகைபிறக்கவவனுரைத்து
முடியுறைக்கநகமழுத்திமுதிகினிற்கைபடவணைத்து
முறுகிமெத்தவிறுகிவெட்கமுழுதுவிட்டுமெலவசைத்து
நெடியபுட்கள்குரலெழுப்பிநிலைதரித்தவிழியிமைக்க
நினைவுமற்றபரவசத்தினிறைவெனக்குவரவயங்கி
விடியுமட்டுமனுபவித்தவெங்கடேசுரெட்டமன்
விரகதாபமதுதணித்தவேளைநல்லவேளையே. 7

மடக்கு.

சுரதஞ்செயவேகடிதடனுச்சுரதந்தனையேதொட்டதும்
சுரதந்திரமாமதனையுமீசுரதந்த்ரமென்றெண்ணேனே
சரசஞ்சொலியேநகைத்ததுமிஞ்சரசந்தானேமுடித்தனுபூச்
சரசம்பிரமவேளெடுத்தசரசஞ்சலமுந்தவிர்ந்தேனே
கரகஞ்சமுமென்முலையான்கரகந்தொடும்பபோதிலநங்
கரகந்தையும்போய்விட்டதரகரகந்திருவமணமிதுவே
அரவந்தருட்குரன்முழங்கஅரவந்தனிலேநடித்தமுகில்
ஆமால்வெங்கவேசுரெட்டன்அனுபோகத்தைத்தொடுத்தானே. 8

மடக்கு.

சேலையுரித்தான்கடிந்துவிழச்சோலையுருட்டிப்பார்க்கையிலே
செவ்வாயிதழைக்கொடுத்தானன்செவ்வாய்நீவிப்பதித்தேன்
மாலைசரிந்தபிடரினுக்குள்மாலையமைந்தபிறைபோல
வைத்தானகத்தைக்கவணையுஞ்சு வைத்தாநயமிதென்றுவைத்தேன்

காலையிப்பிடுவிருக்குமொருக்காலைகைபாலிங்கனத்த
கட்டியணைக்கத்தொடுத்தவளைகட்டிசொலவுமனம்வருமோ
வெல்லையெடுத்ததிரைக்கடலேவேலையெடுத்தமுருகனைப்போல்
வெங்கடேசுரெட்டனெனைமேவச்சமயம்வாய்த்ததுவே. 9

மடக்கு.

கலசமுலையைத்தொட்டணையுங்கலசமதியாமெனிற்பிடித்துக்
கசக்குமுலைக்காம்பையும்பருகக்கசக்குமெனவுநினையாதே
சலவையுரிவேனுயர்ந்தபுயாசலவையினுநான்விடுவேனோ
சாவாதுவழித்துக்கழுத்தினிற்பூசவாதுவரைநேரிதழ்பருகு
புலவிதனையேநினைப்பதுநான்புலவிதலவோசமயமென்றே
புகழ்சேர்வெங்கடேசுரெட்டபூபாவுனையேநானினைந்தேன்
நிலவானதுவுக்குளிவந்தாநிலவாசமும்வந்தடிக்கவுநான்
நினைப்பாயலிலேமருவவுநீநினைப்பாயலிலேயென்றேனே. 10

கனவில்மருமன்னவனெனதுகையைப்பிடித்துமடிப்பில்வைத்துக்
கார்போர்குழலைக்கோதியவன்கையான்முதுகைத்தடவியுமென்
மனதுகுளிரமுனபுகருளவழங்கியவனேபின்புமுத்தம்
வழங்கித்தலையைவளைத்ததரமாறிச்சுவைத்தான்வகைக்காரன்
சனகனமதனைமனம்பொருந்துந்தாமோ தரன்போலிருபுயமுஞ்
சாதிவசைக்கணமலருஞ்சந்த்ரோதயம்போற்றிருமுகமும்
என்துவிழியிற்குளிரவுங்கண்டிருந்தேன்வெங்கடேசுரெட்ட
மேந்த்ரன்கலவிதனைக்கடலே இன்னம்புகல்வேன்கேட்பாயே,

ஆழியிடத்திலிருந்தாளென்றவளுமுரைப்பமகிழ்ந்துகணை
ஆழிகொடுத்தானதனுடனே அதிகவிலைமுத்தமுங்கொடுத்தான்
ஊழிகால்ம்வாழியெனஉரைக்கத்தூதியெமைப்புரக்கும்
உரவோன்வெங்கடேசுரெட்டன்உகந்துவெகுமானமுங்கொடுத்தா
ரூழியானையென்றமுலைத்துணைமேலேற்றிமுரகமெனத்
தொனிக்குஞ்சிலம்புமலம்பவனைதுகிலுந்தரிக்கமனைக்குள்வந்தே
வாழியெனவேநானிருந்தேன்மாரப்பயலும்புறம்போமுன்
மையலொழித்துகண்பொருந்திமன்னன்வரவுங்கண்டேனே. 12

மடக்கு.

கடலேயுன்போல்வந்தவளைக்கண்டேன்மகிழ்ந்தேன்வார்த்தையுங்க
ற், கண்டேயுரைப்பதெல்லாநீகண்டேயெனவுங்கண்டேனே
உடலேன்பசந்தாயென்றுளார்உறவேன்பசந்தாயுரைக்கவென்க்
கொருவரிலாதவாறென்றேன்உள்ளதெனவேதலையசைத்துத்

திடமேபுகன்றாள்புலிபுரந்தசெயமால்வெங்கடேசுரெட்ட
தீரன்கொலுவிற்சென்றாளென்செய்தியுரைத்தன்பவனிகண்ட
தடமென்முலைமார்பொதுமாதர்தம்மிலொருத்தியதுமினிப்பெண்
தாமங்கொடுக்கவேண்டுமென்றாள்சாமிகருத்துமிசைந்தானே. 13

மடக்கு.

காமனிவனேயென்னிலவன்கறுப்பனுவனைச்சிவப்பென்பார்
காளைவேலனென்னிலவன்கண்ணீராறுங்கலந்திருப்பான்
பூமன்னவரைநிகருரையாப்பூமான்வெங்கடேசுரெட்டன்
புகழ்சேரெட்டப்புரந்தழைக்கப்புருகூதனைப்போல்வரக்கண்டே
சோமன்றனக்குமாமனையேதுணையாயிருக்குமாமனையே
சூழும்புவிக்குள்வளைபட்டேதுடித்தேன்மகனுய்வளைபட்டேன்
ஆமன்மதன்சேர்வைப்பறையேஆரமணிசேர்வைப்பறையே
ஆழுநிலையாப்பயநிலையேஅன்னையாலும்பயநிலையே.

கடலுக்குந் தலைவிக்குஞ் சிலேடை-மடக்கு.

கச்சங்கவடங்காக்கொங்கைக்கும்பசலைபொருந்தியனங்
கைக்கும்படிக்குமிருந்துமடல்கைக்குந்தரிக்கவெண்ணிமதி
உச்சம்பார்க்குமடவார்கள்உள்ளங்கவரக்காமனைப்போல் [டலே
உதித்தோன்வெங்கடேசுரெட்டன் உலாவப்பார்த்தேன்பெருங்க
அச்சங்கூறுமுன்னிடத்தில்அச்சங்கூறுமென்னிடத்தில்
அம்பாசலசவாய்நீயுமதன்அம்பாலசைவுமெனக்குண்டே
மச்சங்கடவாதுன்னையுங்காமச்சங்கடவாதெனக்குமுண்டாம்
வணங்காரகுமுனக்கெனக்கும்வணங்காரகுஞ்சிலதியரே. 15

மடக்கு.

வருந்துஞ்சனகிமகம்பார்த்துவரியிற்பலத்தைப்பின்பார்த்து
மணக்கோலஞ்செய்திருந்தவன்வேள்மணக்கோலஞ்செய் ததைப்
பாரான், திருந்துவளையும்போச்செனமீவதெரிவைமாதர்மயலாகுஞ்
செயவேள்வெங்கடேசுரெட்டதீரனிளசைக்கடற்றுறைவாய்
இருந்ததிடனுகைக்காவேயென்னைத்திடனுகைக்காவே
ஏற்றதாலத்திடந்தாரேஎசுந்தாலத்திட்டதாரே
பொருந்துமனைவின்வாய்த்திட்டேபொருப்பேனுேதாய்வாய்த்திட்
டே, புதிதாமதியானந்தினமேபொருகாமதியானந்தினமே. 19

மடக்கு.

காரியனையகொடைக்குமுபகாரிதமிழ்பாரட்டும்விப
காரிமதியோசனையாலுங்காரியகருமம்பகர்வோன்

வேரிதன்சக்திருமார்தவிழியுள்ளிருந்திப்பதையனைத்தும்
வென்றோன்வெங்கடேசுரெட்டன் மேவுமிசைக்கடற்கரைவாய்
வாரிமுசட்டிமலமுகலமேவலைபோனதுவுமெழுகலமே
வந்தால்வருமீசுரப்பாறேமெயலெனக்குஞ்சுரப்பாரே
நீரிருறுமீன்புறவேநெடுநாட்செலுமோநான்புலவே
நெய்தற்றடருங்கொடியாரேநேயரணைமார்கொடியாரே. 17

மடக்கு.

கனத்துப்புடைத்துப்பருத்துவிம்மிக்காம்புதிரண்டுகண்கறுத்துக்
காமன்மகுடப்போற்பரந்துகச்சுக்கடங்காக்கனதனத்தார்
மனத்துக்கிசைந்தவடிவழகன்மதவேள்வெங்கடேசுரெட்டன்
வைகைநதியும்வைப்பாறும்வந்துபெருங்கடற்றுறையே
உனக்குளேவாசஞ்சலமேஉள்ளத்துளவாசஞ்சலமே
ஒழியாதுப்புமயக்கமேஉண்டேதுப்புமயக்கமே
சினத்துமோதுவரியாரேதெரிந்துமோதுவரியாரே
வேணுக்கோடமலைத்தேனேசித்தங்கோடுமலைத்தேனே. 18

பாட்டுடைத்தலைவன் குணத்துக்குஞ் சிலேடை

மடக்கு.

தரியவமுதம்பழகுமதிதெரிந்தவாரம்பிரியாமற்
றீரத்திடறுநீங்காமற்செழிக்குவாய்மைகடவாமல்
வரிசைபுரிந்துதமிழ்புனையவந்தோன்வெங்கடேசுரெட்டன்
மனதுநிறையுங்குணம்போலவளரும்பெரியகடற்றுறைவாய்
பெரியமீனேசினக்கயலேபெண்பால்வருமெனக்கயலே
பெருகுந்திரையிற்சொல்லீரேபிழைக்கத்துதுசொல்லீரே
அரியின்மனையேமுடலையேஅமைத்தாரெவருமுடலையே
ஆரணர்க்குரித்தாங்கணைக்கூடேஅணைகேள்மார்தாங்கணைக்கூடே

ஆக-செய்யுள்-995.

பின்முடுகுவெண்பாவும் வெண்டுறையும்,

கல்விக்குஞானக் கருத்துண்டாங்காயமுறும்
தொல்வினைகளெல்லாந்தொலையுமே-வில்லைத்
தனிற்புயற்றிருக்கணத்தன்வச்சிரதபுயத்தோர்
கற்பகத்தினைத்துதித்தக்கால், 1

சிந்தாகுலந்தீருஞ்செய்கருமங்கைகூடும்
சந்தானமென்றுந்தழைத்தேறும்-பைந்தாமற்
றுணைவயத்தானைமலைப்பாவையளித்தானைமகத்
தானைமுகத்தானைநினைந்தால். 2

செல்வம்பெறலாஞ்செழித்தபுகழ்சேரலாம்
வில்வம்புனைவார்விரிஞ்சேசர்புல்லுமதன்
கோளைமுடித்தரிமயக கோதையிடத்தார்கமல
தாளைமணத்தூடுநினைத்தால். 3

அண்டர்தமக்கரசாமன்புபயர்கொம்பாம்
மண்டருணர்தம்முயிர்க்குவன்னியாம்பண்டுதிறற்
கஞ்சனஞ்சிடுங்கடம்பணிந்தொழுந்துகந்துசூரை
மிஞ்சிதெஞ்சிறிந்தெழுத்தவேல், 4

ஆதரவாயென்னருகிதஞ்சலென்றுவந்துநின்று
போதரவுசெய்யுமெய்போமே-ஓதுதமிழ்
சந்தமுந்தலங்கிர்தஞ்செறிந்துநன்குயர்ந்துதங்கு
விந்தைகொண்டிலங்குசெந்தில்வேல். 5

இங்கிதமாநல்வாழ்வெமக்களிக்குமுற்பகல்செய்
சங்கடமால்வேலைதனிக்குமே-பொங்கமுறத்
தற்பார்த்தனுக்கிரகித்திடக் கருத்தனித்தமத்த
வெற்பிணைத்துளைத்தவுக்கிரவேல், 6

நிட்டும்விணைகளறுத்தின்பறுறவேயெனது
பாட்டுக்குகந்தருள்பாலிக்குமே-நாட்டமிகும்
மண்டலங்கலங்கசண்டர்கண்டர்துண்டர்மிண்டராவி
விண்டொடுங்கமண்டியுண்டவேல், 7

உன்னவினிதாயிருக்குமோங்குசெல்வமும்பெருக்கும்
நன்னலருளைக்கொடுக்குநாடோநும்-பன்னும்
சகடமுருளநெருடுகமலசர்ணக்கருணையறிமருகன்
விகடகரியினிளையமுருகன்வேல். 8

ஊழ்வினையைப்போக்குமேயுள்ளொளியைககாட்டுமே
வாழ்வதற்கோர்வித்தாய் வளருமே-தாழ்வார்
தடபடவென்பதிர் கடலதின்முடிமிசை
விடவதிபொடிசெய்யும்வேல், 9

ஓராருசென்னியொருமுருகாவென்றளவில்
தீராதவல்வினைநோய் தீருமே-போராடிக்

கொக்கரித்துவெற்படர்த்துக்கொக்கரக்கனைத்துணித்த
விக்ரமத்திருக்கரத்துவேல். 10

கந்தாகடம்பாகயிலாயமலையான்
மைந்தாச்சுவாமிவடிவேலவா-சந்தங்
குறமகளாசைகொள்கணவாகுருபரனாகியகுமரா
அறுமுகவாபழனியின்வேலா. 11

அன்பர்பயங்கெடுக்குமத்திகிரியைத்துளைக்கும்
இன்பவல்லிகண்ணிக்கெதிராகும்-மின்பரந்த
வாகுதோளிலேறிமீவாகுசாரியோடியாடி
வேகசூரன்மார்பிளந்தவேல். 12

அஞ்சிமயல்சகியாதங்கமுறுகின்ற
வஞ்சியைச்சேர்தென்றணிகைவள்ளலே-பஞ்சமலர்
அங்கனுக்குங்கிரணத்தந்திமதிக்குங்கடலுக்
குங்குழலுக்குங்குயிலுக்கும் 13

வாங்குசிலைநுதலாரமாயக்கல்வியிலே
ஏங்கிமனமேயிளையாதே-பாங்களிக்காய்த்
தம்பியொக்கசண்டையிட்டுத்தந்தையைச்சுற்றுந்தவொற்றைக்
கொம்பனைச்சற்றன்புவைத்துகூறு, 14

தாமரைப்பூந்தேனையுண்டுதாதனைந்துவண்டிமிர்ந்து
காமரஞ்செய்வாவிகள்சூழ்கந்தாசிவமாமலைவாழ்
பூவையரங்கந்தங்கம்பூகமிலங்குங்கண்டங்
காவையரங்கஞ்சங்கண்காண். 15

வந்துமழைபொழியும்வானேவெஞ்சூர்தடிக்த
கந்தர்திருவிழாக்காலத்தில்-தொந்தரையா
நீர்த்துளியையீற்றிவிடனேர்த்தியல்மாற்றிவிடு
கீர்த்திவருதாட்டனமொருகேல். 16

போற்றுவார்வல்வினையைப்போக்குமேலர்கொண்
டேற்றுவாரைக்கயிலையேற்றுமே-தோற்றறிய
சந்தங்குஞ்செஞ்சொற்சங்கம்பொங்குஞ்செந்திற்
கந்தனசெம்பொன்றண்டைக்கால். 17

ஆறுமுகமென்றவிலச்சவிர்க்குமே
வேறுவினைவந்தால்விலக்குமே-கூறுபுகழ்

மாரியொத்தசூரபத்மன்மார்பிளக்கவேகொடுத்து
வீரசத்திரான்மிகுந்தவேல், 18

வேலாவிராலிமலைவீராவனக்கொருபெண்
மாலாகியநின்றுவாடுகிறாள்-நீலான
உற்பவக்கயற்கணிச்சியுத்தரிடத்திடச்சமர்த்தி
அற்பசிற்றிடைக்கொடுச்சியாள் 19

கந்தனென்றும்வேலனென்றுங்காணமயில்வீரனென்றும்
செந்தனென்றுமேன்புலவீர்செப்புகிறீர்-முந்திவிளங்
கூனற்பிறைசூடச்சிவனாருக்குபதேசித்தருள்
ஞானக்குருவேடப்பயலை. 20

பன்னிரண்டுதோளாபரங்குன்றாவெப்பொழுதும்
என்னிரண்டுதோண்மீதிலேயிருப்பாய்பொன்னின்
கதிர்முடியப்பாகுகிடக்கனவரையப்பாபழனிக்
கதிபதியப்பாகுமரப்பா. 21

நோகாதோவேலாநீநோக்குமடவாளுக்காப்
போகாவனந்தேடிப்பேணுக்கால்-வாகாத்
தினநினைந்திட்டுனைவணங்கித் திரியுமன்பர்க்கருள்செயும்பொ
கனகதண்டைச்சிறுசதங்கைக்கால். 22

வாரீர்பழனிவடிவேலரேகடம்பைத்
தாரீரென்சிந்தையினிற்றானுறையீர்-சோரீர்நீர்
கன்றுநஞ்சுபிஞ்சுமஞ்சுகண்களுஞ்சிவந்துபொங்க
என்றனங்களுங்கசங்கவே. 2

மேகநிறமான்மருகவீறுதணிகேசவிது
வாகடினமேவுமிவளாவியருள்-வாகுவளை
நத்தத்தத்திற்பற்றிநச்சுப்பைகுடத்து
நிர்த்தத்திற்கிச்சித்தநீர்.

பூவைக்குநண்ணுபகற்போதகமதாமெலிந்தாள்
வாவிக்கவின்றணிகைவாழ்குமரா-பாவிமதன்
அம்புரம்புகுந்தலைக்கவம்பகந்தணந்தெறிக்க
வெம்பிநெஞ்சமுந்திகைக்கவே.

அம்பிறைக்குவைந்துமலரம்பிறைக்குநொந்துமிக
அம்பிறைக்குங்கண்ணாட்கருள்புரிவாய்-நம்புதனி

லைக்கிரிக்குளுற்றசித்ரலைச்சடைத்தனக்குறத்தி
லைக்களித்தலைத்தவத்தனையே. ௨௬

என்னிடத்திலேகுமராவென்றுதேபேக்கமா
உன்னிடத்திற்கொண்டமயற்கேதாயோதுன்னிரவு
சொல்லாப்பகட்டுமென்கண்செல்லாப்புரட்டு
பொல்லாப்பரத்தைவஞ்சிபோல். ௨௭

செங்கமலக்கண்கலங்கிச்சிந்தைநொந்திராமுழுதும்
வெங்கணைக்குஞ்செங்கணைக்கும்வேலோனே அங்கசன்றன்
பூங்கணைமெத்தைத்தும்பூங்கொடிகத்திப்பட்டுத்
தாங்கணைமெத்தைதைத்துத்தான். ௨௮

சங்கநிதியோகம்வாழ்சண்முகனேநின்மோக
மங்கையெழின்மேனிகளம்வண்வருங்கு-கொங்கைசெங்கண்
கந்தந்தங்கந்தங்கங்கம்பந்தந்தந்தம
பந்தந்தந்தண்கஞ்சம்பார். ௨௯

நீமருவவர்முருகாநித்திலங்களுஞ்சிந்தக்
காமருதேனூட்டிநெடுங்கன்னல்வளைத-தேமதனன்
வண்டுவாரக்கண்டுளறிமதியும்பரிபோய்
வணடுவாய்ப்புலம்புவாள். ௩௰

நூறுமுகம்மாய்ப்புகழ்ந்துநூறாயிரம்போதம்
வேறுமுகம்பார்த்திருக்கவேண்டாமே-ஆறுமுகச்
சுத்தனைசித்தத்துவைத்துச்சொற்றமிழ்ச்சித்ரக்கவிக்குட்
கத்தனைச்சற்றுதித்தக்கால். ௩௧

பங்கயக்கணவேலவனேபைந்தொடியாபட்டிநித
பங்கிமிகவும்வளர்ந்துவாடுகிறாள்செங்கைமலர்
அன்னநடைமின்னலொளிசின்னவிடைவன்னமுலை
கன்னல்மொழிமனனுமிவள்காண். ௩௨

எத்திக்கும்போற்றுமிவளையெழிற்குமரா
தித்திக்குநின்கனிவாய்த்தேனுறனை-முத்தமிட்டுச்
சித்திரைச்செப்புதனத்தைச்சிக்கெனக்கட்டிப்பிடித்துக்
சித்தசமோதுப்பொற்பத்திற்சேர். ௩௩

வேல்வர்தாநேற்றனைவிந்நையைநானேதுசொல்வேன்
கோல்லாடமோசையிடக்கொம்பனையேசீலமுடன

கட்டிமுத்தமிட்டணைத்துக் கட்டிமைக்கணைச்சுவைத்து
மெட்டினைப்பதத்திலிட்டுமேல். ௫௪

வேலவனேநின்கலவிவிந்தையதற்கேற்றமங்கை
கோலவரிக்கண்சுழற்றிக்கொஞ்சுகிளி போலமுலைக்
கச்சுச்சுட் சிக்கச்சொக்சப் பொற்சுட்டிக்கட்டிப்
பச்சைப்பொட்டிட்டத்தைப்பார். ௫௫

ஏவிழியார்மூரளணிலாக்கண்டுகருங்
காவிமுகையவிழுங்காஞ்சியே மேவலரூர்ச்
சக்கரக்கரக்குதைக்கணைக்கிலக்கெனக்கொள்
நக்கரக்கரக்கணக்கர்நாடு. ௫௬

நாலாநாள்சேர்ந்தணைந்தநன்னயத்தையெண்ணிநெத்த
மாலாநாள் வேலவனைமாரனெய்யும் கோலாலே
வண்டுகுடியான குழல்வஞ்சியெனமோடயந்து
வண்டுகுடியான்மருவவா. ௫௭

வானுதித்தமாமதிக்கும் வாரிவிட்டவேள்கணைக்கும்
மீனுதித்தவாரிதிக்குமேதினிகருள் நானெருந்தி
சிந்தைவாடிநொந்தசேதிசெங்கைவேலர்பங்கிலோடி
மந்தமாருதஞ்சொலோதுமா. ௫௮

செந்தழல்போல்வீசுதினிச்சேர்ந்தணைவாய்வேலவனே
கந்தமலர்சோலைவண்டுங் கார்க்குயிலுந் தொந்தமுடன்
பாடுதுவம்புந்தும்பும்பார்மதனுந்தும்வந்துஞ்
சாடுதுவம்புந்தும்பிந்தா. ௫௯

வாகந்தாவல்லவென்றுல்வாகந்தாராகிலுந்தா
சோகந்தாமீறிவளைத்தோய்ந்திடவே நபகஞ்சேர்
மாலையிந்துசோலைவண்டுமாரணம்புசூழநொந்திவ்
வேழைநெஞ்சமேகலங்கினாள்.

பாகாருமின்சொல்வள்ளிபாகாதேவேந்தனருள்
வாகனகுஞ்சரிவிவாகாநி யேகாவல்
என்றுநம்பு வென்றனைந்தசிந்தையன்புபொங்கவந்து
நின்றுகொண்டிரங்குகந்தனே..

வாதாவுன்றனுநடவாதாவோராறிரண்டு
காதாவுஞ்சித்தமிரங்காதா நீதாவென்

சிந்தைக்கிசைந்தபடிசெஞ்சொற்கிரங்கியருள்
கந்தப்ரசண்டமுருகா. ௪௨

வந்தனையாவென்றுதுயர்மாற்றிமனவேட்கையெல்லாம்
வந்தனையாத்தந்தருளுமாதவா-பந்தனைய
கொங்கைகுறமங்கையொடுகுஞ்சரிபுயந்தழுவு
கங்கையுமைதந்திடுகுகா. ௪௩

அந்தணர்கள்போற்றுமருந்தணிகைவாழ்குமார
வந்துகலந்துமருநாள்-பைந்தொடிக்கி
மேல்படுத்தமுத்தங்கள்வெப்பட்டுபொரிந்துதென்றற்
கால்பட்டுச்சரிந்ததென்பன்காண் ௪௪

மெத்தமயலாகிமெலிந்தயர்ந்துவாடுகிறாள்
சித்தமுவந்தாண்டருளுஞ்செவ்வாளோ-இத்தலத்தில்
கண்டுமொழிகண்டஞ்சுகக்குயில்குழல்கண்டஞ்சும்
வண்டுவிழிகண்டஞ்சுமான். ௪௫

இருபுறமுங்காவேரியோர்மாலையாச்சூழ
திருவரங்காவெங்கள்குலதேவா-வெருவ
எரிபுரிந்துவிழிசிவந்துயமனிருண்டவுருவுகொண்டு
வரவுகண்டுதிகிரிகொண்டுவா. ௪௬

ஒருத்திமிகமயல்கொண்டுன்சமுகம்வந்தாள்
திருத்தியனையென்றுவகைசெப்பி யுரைத்திடினற்
செப்பமுலைச்சொற்பழிகொத்தவிழிச்சித்திரவிற்
பொற்புருவத்துபபதரத்தாள். ௪௭

பாலாழிநீங்கியிந்தப்பார்தனிலோர்கள்ளனுக்கா
மாலாழிசங்கொளித்துவந்தருளக்காலாழி
அன்றனைதக்கடித்திழுக்கவங்கவற்களித்தமுத்தி
இன்றளிக்கவென்றனுக்குநீ ௪௮

பாரோர்புகழவரும்பங்குனியுத்திரத்தில்
ஆரூர்வீதியனுகின்றார்-சேரே
பணச்சர்ப்பந்தரித்துப்பொற்பதத்திற்கிண்கிணிச்சத்தங்
கிணுக்குக்கிண்கிணுக்கென்னவே. ௪௯

திருவிளவாயிற்பதியிற்சேவேறுமீசா
மருவுளகொன்றைத்தார்மழக்கில் வெருவுளதோ

சங்கமும்விழுந்திடா துதங்கமும்மொழிந்திடா து
திங்களும்மன்றிடா துதோ. ௫௰

செங்கயலோநீலவண்டோசித்தசன்கைநீதவண்டோ
பங்கயமோமால்வளரும்பாற்கடலோ-தங்கமயி
ம்ச்சிரநகைச்சிரவிண்மெச்சபுரு
வச்சினவிடைச்சிவிழியார் ௫௧

உன்மனதுமென்மனதுமோர்மனதாவொன்றிடினே
ம மதனும்வில்லெடுக்கமாட்டேனே நமைமதியோய்
குன்றடந்துபந்தைவென்றுகொன்றடைந்ததும்பிகுன்ற
வென்றடைந்தகொங்கைமங்கையே. ௫௨

நித்தமுநினைத்திரவினித்திரையுமற்றுருகி
சித்தயனெடுத்தவருடிக்கணைதைத்துருகி
மெத்தமயலுற்றபிரமித்துதலைசுற்றுதடி
தந்தையொருமுத்துமதா. ௫௩

கேலோகடலோவிடமோகருவண்டோ
சேலோகணையோசிறுவாளோ-கோலமுடன்
தண்டங்கித்துண்டுருளத்தத்திவிழக்குத்துமுலை
கண்டங்கிங்காரிகடைக்கண் ௫௪

நீலமோவேலோநெடுங்கயலோவாரிதிசேர்
ஆலமோவம்புயமோமெங்கணையோ நீலநிற
வாவிச்சோலைக்கருகில்வந்துபுணலாடுகின்ற
காவிச்சேக்காரிக்கண். ௫௫

சேலோகணையோபிணையோநற்றென்னவன்கை
வேலோநமனோமிளிர்வண்டோ தாலப்
பளபளென்றுஒளிமிகுந்துயவளமிஞ்சிநகைபுனைந்த
களபகும்பமுலைமடந்தைகண் ௫௬

முக்கனியிதழ்கொட்டாமுற்கதிரையிற்குமார
விக்கநரைமிக்கவினிபித்தமுது சர்க்கரையி
இக்கிலைகசக்குதுநிசிக்கலையுத்திக்கிவத்தில்
அக்கரைபரக்குமட்டா ௫௭

ஆராபொறுப்பார்சொல்லாதித்தாவஞ்சிமன்னு
சேராபராசசேகரா நேரே

சினத்துவட்டமிட்டுசெப்பணித்துதித்தபொற்
றனத்திலிட்டமுத்துவெக்கைதான். ௫௮

இந்நேரநீயவளை யின்பமணமேபுரிவாய்
தன்னேரருணாசலதுரையே-மன்னுமதன்
பூவினம்பையேவநின்று போர்செய்கின்றதாம்மெலிந்து
சாவியங்கணான்கலங்கினாள். ௫௯

கோங்கினரும்போகுமிழ்போபொற்பந்தோ
ஓங்குவரைபோவொளிர்செப்போ-மாங்குயிலின்
மன்னுமொழியினடைமின்னலிடையென்னவரு
கன்னிவளர்சின்முலைகள். ௬௰

இத்தலத்தோர்போற்றுமிறைவனேதஞ்சைநகர்
வித்தகனேசிவாசிவேந்தகேள்-சித்தசன்றன்
சமரிலங்கக்குழலுநந்தஞ்சதிருமும்பெண்டிருமுகஞ்செங்
கமலமுஞ்சந்திரனு மஞ்சுங்காண். ௬௧

பூமிதனிற்பேசும்புனிதாசிவாசிமன்னா
காமியின்மேலின்றுபனைதகண்டதுகேள்-காமனவன்
மாகரமுந்தோகையரு மாமதியும்பாலனமும்
சாகரமுங்கோகிலமுந்தாம். ௬௨

மண்டலத்தோர்பேசுகின்றமாலேசிவாசிமன்னா
கண்டஞ்சுங்கன்னிதனங்கைத்தாளம்-செண்டுசிமிழ்
கும்பம்புயங்கிரீடங்குஞ்சரக்கும்பைமேரு
பம்பரஞ்சிரந்தகூதுபார். ௬௩

மாதங்கவகதிறற்குவட்டமளித்தோனுதவும்
மாதங்கவத்திரற்பின்வந்தகுகா-மாதங்கந்
தக்கங்கம்பும்போந்துந்தண்கஞ்சக்கண்டம்
பங்கந்தங்குஞ்சக்கம்பார். ௬௪

கடுமொழிசேர்சூதைவென்றகந்தாசிம்மாதின்
நடுமொழிகளங்கண்முனநற்றாள்-ஒடுசேரத்
தந்தஞ்சுங்கண்டஞ்சுஞ்சங்கஞ்சுட்வீணைடஞ்சும்
பந்தஞ்சும்பஞ்சும்பார். ௬௫

என்றுவடிவேலிளங்குமானைக்கண்டாள்
அன்றுமுதற்சேரமனவாகியே-இன்றுறும்.

திக்கிளைத்துச்சோக்கிவட்குத்திக்கிவிப்பக்கத்தடுத்துச்
சுக்கெடுத்துந்தட்டிவைத்தூது. ௬௬

என்னைச்சொல்வாரல்லைதென்னைவிதித்தருகன்
றன்னைசசொல்வாரிலையித்தாரணியில்-நன்னி
தனைமறந்தாளெனைமறந்தாடுயிறுந்தாளனைபொருந்தான்
எனைமறந்தாளுனைமறந்தாளென்று. ௬௭

அன்றயன்மால்காணு வடிமுடியைக்காண்பதற்குத்
தென்றிசைக்கோனென்னதவஞ் செய்தானோ-வென்றிதிகழ்
ஆடரவாளாநீறணிதோளர்வாதிரைநாளாமாதுமனுளா
தோடவிர்காதா மாகடவூராசொல். ௬௮

தென்றலுலவுந்திருக்கடவூரெம்பெருமாள்
மன்றலத்தெறிந்தேமதவூரும்-கொன்றைக்காப் (குந்தும்
பொன்பரவுந் திண்கொங்கையிரண்டும் புண்மடநோந் துன்பமி
அன்புதிரண்டும்பெண்கொடிநெஞ்சஞ்சும். ௬௯

பாலனுக்காவென்று பகடேறிவந்தெதிர்த்த
காலனுக்குக்காலா கடவூரா-மேலோர்
கரும்புகொண்டங்கெதிர்ந்து வந்தங்கசன்பெருஞ்செஞ்சரங்கள்
சன்மருண்டுநெஞ்சகலந்துமென்றன மான் ௭௰

தொண்டருடன்கூடித்துதித்திரண்டுகண்ணாரக்
கண்டுதொழுவேனோகடவூரா-பண்டோர்
அழுதிருஞ்சிறுகடத்தன்றெழுமுனக்கன்பரைமருட்டும்
சமனையெற்றும்பபுரச்செந்தாள். ௭௧

என்றுதொழுவேனெளியேனளிமுரலு
கொன்றையணிதென்கடவூர்க்கோமானே-துன்றும்
கனற்பொரிக்கட்பகற்றிலுற்றுக்கறுத்ததெற்குத்திசைக்குளுக்ர
தனச்சினத்துட்டுதைத்தபத்மத்தாள். ௭௨

பற்றிப்பணிந்து பரவவரந்தருவாய்
கற்றைச்சடையாகடவூரா-வெற்றிநெடுங்
கொண்டலொக்குங்கண்டசத்தங்கொண்டெதிர்த்தங்கருக்குஞ்
சண்டனைக்கண்டன்றுதைக்குந்தாள். ௭௩

ஆற்றுமோநெஞ்சத்தடங்குமோகொண்டமையல்
கூற்றுதைத்தென்கடவூர்க்கோமானே-மாற்று

கும்பமுலைத்திங்கணுதற்கோந்தளக்கொம்பைவெறுந்
தம்புதொடுத்தங்கசன்விட்டாம். ௭௪

காணப்பெற்றேமிரண்டுகண்ணாரக்கண்டன்பு
பூணப்பெற்றேமனமே பேசாதே-சேணிற்
புரம்புரம்புரிந்திடும்புரந்தரன்தரும்
பயம்பரந்தருஞ்சிதம்பரம். ௭௫

கண்டேன்சிதம்பரத்தைக்கண்குளிரமெய்ஞ்ஞானங்
கொண்டேன்சிவாயவென்றுகும்பிட்டேன்-வண்டேகேள்
நீண்டசெம்பொற்காண்டகும்பிற் பூண்டசெங்கைபாண்டரங்கத்
தாண்டவன்றன் பூஞ்சதங்கைத்தாள். ௭௬

தேரோடும்வீதியெலாஞ்செங்கயலுஞ்சங்கினமும்
நீரோடுலாவிவருநெல்லையே சாரோம்
கந்தரத்தரந்தரத்தர்கந்தரத்தரந்தரத்தர்
கந்தரத்தரத்தரத்தர்காப்பு. ௭௭

வல்லாளசண்டாவடுகநாதாசுவர்க்க
வல்லாளகண்டமயல்கொண்டு-பொல்லாத
சித்தசன்சரத்தினொந்துதிர்த்தகண்ணைமுத்துடன்கை
நத்திழந்திடத்தயங்கினாள். ௭௮

பூவணைமேனாட்டம் பொருந்தாதிருப்பவனைக்
காவடுநாதாதென்கால்சீறித்-தாவிவர
இக்குவிலிநற்கணைக ளிக்கணமெடுக்கவதி
அக்கினிதரக்கவலையாய். ௭௯

தாண்டவாவென்று தருளந்தனியிருந்தென்
ஆண்டவாவந்தென்னை யாளென்றுமீண்டுமதன்
தொட்டநஞ்சம்பிற்கிரங்குஞ் சொற்றளர்ந்தென்றந்தையங்கம்
சுட்டவெண்டிங்கட்குடைந்தஞ்சும். ௮௰

பந்தளவுகந்தளபந்தனையணிந்தமுலை
கொந்தளகபந்தமுமிருந்தமுகில்-அந்தமுண
தந்தனமெலிந்தவிடைசிந்தவரிவுந்தரளம்
எந்தநகரிந்தமயிலே. ௮௧

தேசமதனிற்பேசுந்தேவாசிவாசிமன்ற
வாசமலர்மாலையணிமார்பா நீ நேசமொடு

காடுமேடமாதுமதனாலுமதியாலுழுக
பாடுமேடவாளையனேவா. ௮௨

பாராதனிற்பேசும் பரனேசிவாசிமன்று
சீரமைந்தமாதுகொங்கைச் சித்திரங்கண்-டேரமர்க்கும்
பங்கயங்கிண்ணஞ்சிலம்பம் பந்திதங்குஞ்செங்குடங்கம்
பங்கயந்தண்டெங்குமனுசும்பார். ௮௩

இந்தசனல்வாடுகிறேன் சேர்ந்தணையவேளையிது
வித்தைசெய்யவேண்டாங்காண் வேலவனே நித்தயப்
படிக்குத்தணித்துப் படுந்துந்தவிந்துப்
துடித்துத்திகைத்திபபடி. ௮௪

எய்யவந்தகாமாவுனக்கிங்கிடமில்லை
உய்யவந்தானென்னொடுறவானை-செய்யமலக்
தேனைவிடுபூவைமுடிதின்றுவிடுகைக்கரும்பை
மீனையொருசாக வில். ௮௫

வேலனேவேளூர் வினைதீர்த்தவனுதவும்
பாலனேசேனா பதிவேளே சீலனே
கோங்கரும்பிற்கொங்குகொங்கைக்கூந்தல்கொண்டற்காந்தளம்
பூங்கரும்பிற்காங்கடம்பிற்பூ ௮௬

சுடுமோவிளந்தென்றல்தோகையின்மேலம்பு
படுமோமெய்வாதைப்படுமோ-கடலூரா
நிரணக்கார்வேணிநம்பா நீலகண்டர்மேனியின்பால்
ஆரணங்கார்காலசங்கரா. ௮௭

பேதையேன்காணப்பெறுவதெந்நாள்வேலவர்கோ
தாதையேன்செம்பொற் சபாநாதர்-மாதவத்துச்
சாத்துலங்கண்காடேத்தவும்பிந்தாப்புயங்கம்போற்றவுந்தித்
தாத்தையென்றுந்தூக்கிடுஞ்செந்தாள். ௮௮

எல்லாருநன்றாயிருக்கட்டுமேதினிக்குள்
வில்லாருந்தென்பழனிவேலோனே பொல்லாத
பாதகப்பரத்தைவைத்த பாசமெத்தமுற்றுமத்தைப்
பேதகப்பரத்திவிட்ட பேர். ௮௯

வையம்புகழ்பழனி வாசன்குமரன்முரு
கையன்தழுவியவளையாள் தைப்பல்.

மதியழுன்றுவளைகழுன்று மதனனம்புபடவுழுன்று
மதிமரந்துமிகவருந்துவாள். ௬௰

வேலாவிராலிமலை வித்தகாநின்மீதின்
மாலாகவேயொருபெண் மையல்கொண்டாள் மேலான
விட்டமிட்டபொற்றனத்தி வச்சிரபதக்கமொய்த்த
கட்டிமைறக்குறுச்சிறுக்கிகாண். ௬௧

மையுமணையும் வனப்புமிழந்தான் மது
செய்யும்விதமென்ன சித்தசவேள் எய்யும்
தனிச்சரத்தைத்தடுப்பதற்குத் திருத்தணிக்கர்த்தனுக்கெதிர்க்க
கனத்தினிற்புக்குளாத்திடத்திக்ஙார், ௬௨

வைத்திடவேளாவி மருமத்தினஞ்சம்பால்
எத்திறுடரிமைக்கா மீசரேநத்துதிர்த்த
முத்தாரத்தினத்தைவைத் திழத்தவத்தினாத்தைடிற்ற
மத்தகத்தினத்திமெத்த மால். ௬௩

பாகாகாவின்சொலுடைப்பந்தொடிமேற்கோபமென்ன
வாகாமதன்கணையால்வாடுகிருள் கீழாகி
காககிரிவேலிதமும் வானவர்கடேவர்பணி
காணவினமானவடுகா. ௬௪

அம்புலியூர்தன்னையடைமின்பணிகள்
அம்புலியூர்வின்னுலகையாள்வீர்கள் அம்பொரு
கத்தினயனத்திலகுகைத்தலவனிர்க்கரிய
கத்திவரியனத்தியிடத்தான். ௬௫

வாடுகிறுனின்மாலைவாங்கக் கிளியொன்று
தேடுகிறுனின்மாலைவாங்கிளியொன்று
ஆனகனம்புசொரியவிந்துவனலைமொண்டுவிசிற்வெய்பி
மனதுநொந்துகலையிழந்தமான். ௬௬

நீரோதிருவழகர் நீரோகரியமுகில்
நீரோதிருமலைமேனின்றருள்வோர் நீரோ
வளர்ந்தசெம்பந்தங்கள்கொண்டெழுந்துமண்டலங்கள்பஞ்
டளர்ந்துகொண்டடங்கலுண்டயால் ௬௭

சித்திரமாங்கூடற்றிருவரங்கப்பெருமாள்
மெய்த்தனவேடன்றனைக்குண்மேவியாள்

செங்கையுஞ்சங்கும்பொருந்துந்திங்களுமெங்குந்தயங்கும்
கொங்கையெங்குங்குங்குமந்தங்கும். ௯௮

நாராயணரேராமபத்திரரே
காரம்பசுமேயத்தக்காளியன்மேல் நீரோமுன்
தொக்கணகதிக்கணத்தொந்திமிதிமிந்திமிதி
நக்கணகவென்றேடினர். ௯௯

உறுகிள்ளைமாமொழியீரோற்றிற்றியாகர்
சிறுபிள்ளையோவீண்செருக்கோபெறுகியதோ
தொக்கணகதிக்கணத்தொந்திமிதிமிந்திமிதி
நக்கணகவென்றேடினர். ௱

பூமாலைபாமாலைபூண்டசட்டைநாயகமே
மாமாலைமின்கொண்டுவாடியனலாமாலை
இந்தாலும்வந்தாலுமின்றுண்மெலிந்தோடி
வந்தாளகலந்தாளுவாய். ௱௧

மீனக்கொடியானே மின்னையனைவதற்குத்
தானெனவேந்த தயாபரனேஎனையவற்
கென்னபலனென்னநடை யென்னவிடையென்னவிதழ்க்
கன்னலெனுந்துன்னுமிதழா. ௱௨

ஆலமோவேலோவலைகடலோவம்புயமோ
நீலமோமாரனெடுங்கணையோசாலச்
சிறுத்தவிடைபருத்தமுலை சிவந்தவிதழ்வெளுத்தநகை
கருத்தகுழலொருத்திகடைக்கண். ௱௩

நீரோசிதம்பரனர் நட்டமதியோதென்புலியூர்
நீரோசுடலைக்குனிந்தனர் நீரோ
கடத்தகளிற்றினைக்கறுத்துறப்பிடித்திழுந்
தடாத்தறுத்துரித்துடுத்தவர். ௱௪

போற்றுவார்வல்வினையைப்போக்குமேபூமலர்க்கொண்
டேற்றுவாரைக்கயிலையேற்றுமேசாற்றவிளங்
கொந்தந்துங்குஞ்செஞ்சொற்கந்தம்பொங்குஞ்செந்திற்
கந்தன்செம்பொன்றண்டைக்கால். ௱௫

வன்மத்தைநின்மனதில்வையாதேபாவியேம்
கன்மத்தைநீக்கியாளையேற்றாய் சென்மத்து

ணுமலையுண் ணுமலுமின் ணுர்முலையுண் ணுமலுமன்
ணுமலையுன் ணுமுலையம்மா. ௱௬

மேகக்கவிந்ததுபோன் மேலெழுந்தகாலனைக்கண்
டாகந்தளர்ந்துநெஞ்ச மஞ்சாமுன் மாடகவூர்ப்
பூதநாதவேதகீதா புவிதாதாதேடுபாதா
மாதுபாகாகாலகாலாவா. ௱௭

ஆர்செய்தவஞ்சனையோவா றுமுகவேலர்மலர்த்
தாரீரதுற்றதென்ன கர்ப்பனையோபாரதனில்
சூதுகற்றசக்காளத்தி தோதகத்திபச்சிலைக்குள்
ஓதுசெப்படக்குவித்தையோ. ௱௮

கச்சிக்கச்சாலைக் கடவுளடியைத்துதித்தால்
இச்சிக்கச்சாலையினாணின்பமோர்மேச்சிக்க
நித்தநித்தம்விர்த்தியுற்றந்நிட்களத்தை பெற்றமுத்தர்
பத்தியைச்சித்தத்தளிக்கும்பார். ௱௯

அன்னைவடிவம்மைபோற்றி யந்தரியைச்சிந்தித்தால்
பின்னைவடிவம்மையுற்றும்பேதுரு முன்னைவினைப்
பந்தமுந்தவிர்ந்துமேவுசந்தமுந்தவிர்ந்துஞர்ன
சிந்தையுந்தணிந்திடார்தோர். ௧௧௦

என்றுடுங்காமிசரின்பதடிவைத்துதிக்க
அன்றும்வினைவிட்டகலுமேகுன்றுமல்
தொங்கிட்டதோதறிகிடத்தோதரிகிட
தொங்கிட்டத்தாதரிகிடதா ௧௰௧

திருமுடுகுவெண்பா.

திங்கடும்பைகொன்றையுஞ் சிறந்தணிந்துகொண் டுநின்ற
அங்கியம்பகன்பயந்தவன்பகந்தா தங்கமென்னும்
தேகத்தேனேகுருவர்செய்கட்டோனேபனிரு
வாகுற்றேனேபெருமானே. ௧௰௨

கன்னிமுகநன்னிலவு கன்னிதழின்னலவு
பன்னுநகைபன்னமுற் பன்னிருகைமன்னவநின்
முன்னியிலையன்னவிழி மின்னவிடைபின்னுசடை
அன்னநடையின்னவறிவாய். ௧௰௩

உக்ரகிரியுக்ரகடலுட்கவட வெட்போடியர் .
கக்ரகிரிக்கப்பாலுந்தாண்டுமே விக்ரபனை
வென்முருகன்கந்தன் விசாகன்குகன்கரிய
மான்மருகனே றுமயில் ௧௰௪

கந்தனைந்திமிர்ந்தகொங்கை சந்ததம்பசந்ததிங்கு
வானங்கடம்மையுந்தவந்தொழுந்துலங்கைதகு
நேசபாசமோபொலாது நீநிலாவிமேலருலாவ
வாசலாமுலாசவேலவா. ௧௰௫

வாமமேவுசிதாசிவாசிராசநேயமோக
காமமாகிசோபமானகாமிவாம் தாமமேவு
கெங்கைபங்கும்பைபம்புகொண்டைகொண்டல்வண்டடங்கு
செங்கைபங்கயக்கண்வண்டுசேர் ௧௰௬

வெண்பா.

அங்கியாரூர்தியானவிருமதிக்கும்
தகுபன்றியையிரண்டுந்தந்திடவேயெங்கும்
உரைக்குங்காண்மைந்தற் கொருவடுவற்ற
துரைக்குத்துரையேநீசொல் ௧௰௭

அங்கியூர்தி ஆடு தித்திரை அரனூர்தி இடபம் வைகாசிபன்றி வராகன்.

இத்தையனையவுருவில்லான்விடும்போதே
வைத்தசுரையோதடுக்கமாட்டாதே கொத்துலவும்
அங்கமுகக்காத்துறைசையம்பலவாணன்புயத்துச்
செங்குவளைத்தாரினையேதேடு. ௧௰௮

இத்தையல்கைபோதேவு புஷ்பாணம்தகர் ஆடு.

ஆக செய்யுள் ௲௱௰௧.

(*)(*)(*)

கடிகையமுத்துப்புலவர்பாடிய

விருத்தம்.

காமடியச்சக்ரந்தொட்டெய்தவெங்கடேசரெட்டன்கமலப்பூநீ
காமடிதொட்டாளுலும்வரவழைப்பார் காணேனங்கணையார்சேவ
காமடிபட்டிடுபேரிவாரிதியாமிவளையெவர்காப்பாரோகல் (சே
காமடிவிட்டிறங்காதே பேதையின் வேற்கணைதொடுத்தார் காமே

கன்றுதொட்டுக்கனியுருக்குந் தீர்த்திவெங்கடேச ரெட்டாகமலக் கண்ணா, கன்றுதொட்டதத்தனையுங் கைநெகிழ்ந்ததறியாதேகலையுஞ் சோர்ந்த, கன்றுதொட்ட ரவிக்கையெல்லாங் காமனம்புகிழித்ததுபா ர்கருத்துந்தானே, கன்றுதொட்டுப்பட்டசிட்டுப் போனவெம்பேந்துவா வெதுங்கண்டிலாயே. உ

வளவனைநேராகவிசைவளர்த்த வெங்கடேசுரெட்டன் மருவாநா ளில், வளவனைமாரையும் வெறுத்தான் மாரனும் பூங்கணையேவ வரு ந்தியேய, வளமனையே நினைத்திருந்தாண் மடவெழு தவறியாளாய்மரு ங்கிவழுமேலது, வளவனையாளுடையுமிழுந்தாள் வண்டிறங்காள்கண்டசெ ய்துவழுத்துவீரே. ௩

பாரப்பாவருமையறியினைகைவெங்கடேசுரெட்டாபகரக்கேண்மோ
பாரப்பாமொழிவிழியாணியேறி வறுங்களிற்றை பார்த்தாளாங்கொம்
பாரப்பாமதிக்கவராவென்றுளம்மதிபதிக்கப்பயந்தேயீச
பாரப்பாவையினுகமானுளயாளின்றறெடுந்துபாவைதானே. ௪

கருக்கோட்டையாலும்வெங்க டேச்ரெட்டமேந்த்ரனென்னைக்க லந்தபோகக், கருக்கோட்டையானுமடி சகியேமுன் போலின்னுங்கா மனுந்த, கருக்கோட்டைநிகர்மீசை முறுக்கிமரக்காணிலவுஞ்சங்குன் மாவைக், கருக்கோட்டையம்பிணியும் பறிவெருந்ட்டு தலைவாசல்கடக் கத்தானே. ௫

சந்தானமேநிகர்க்குமாரமுத்துசமிசகோதர்வான்பொன்னே
சந்தானமேருவெனநிறைந்தகிமாரெட்டனெனைத்தழுவாவாயா
